# தாயகம்

கலை இலக்கிய மாத இதழ்

5

விலை சதம் 75

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு

கடுமையாக உழைக்கும் பொது மக்களைப் போலவே உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர இலக்கியமும் ஒடுக்கப்படுகின்றது, அச்சுறுத்தப்படுகின்றது என்பதையும், அந்த இலக்கியம் உழைப்பவர்களுக்காகவே போராடுகின்றது, உழைப்பவர்களின் லட்சியத்தையே கொண்டுள்ளது என்பதையும் எமது தோழர்கள் சிந்தும் குருதி புலப்படுத்துகின்றது. எனவே அது புரட்சிகர இலக்கியந்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

— லூசுன்

# விமர்சனங்கள்

விமர்சனங்கள் .. ......!

படைப்புகளின் இருந்துதான் விமர்சனங்கள் பிறக்கின்றன. விமர்சனங்களால் படைப்புகள் மேலும் செழுமை அடைகின்றன.

விமர்சனத்தில் வெறும் மேலோட்டமோ ஒரு தலைப் பட்சமான போக்கு ஆபத்தானவை மட்டுமல்ல சமுதாய விரோதமானவையும் கூட

விமர்சனங்களில் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தை முன்வைத்தல் அவசியம்.

தவறான கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும் அவை விமர்சிக்கப்பட வேண்டும். வரட்டுத்தனமான முறையில் அல்ல இயங்கு இயல் முறையில்.

புதிய உண்மை ஒன்று புதிய தவறான கருத்துக்களுடன் மோதும். இப்போராட்டம் தவிர்க்க முடியாதவை, முற்றுப் பெருதவையுமாகும்.

இந்த வகையில் "முற்போக்கு" என்ற முத்திரையுடன் வெளிவரும் படைப்புகளில் மாக்சிசவாதத் தத்துவத்தை திரிக்கின்ற படைப்புக்களையும் நாம் விமர்ச்சிக்கவேண்டும், நிராகரிக்க வேண்டும்.

இப்படைப்புகள் சமுதாயத்தின் தேவையையும், யதார்த்த நிலைமையையும் புறக்கணிப்பவையாகவும், உதவாதனவாகவும் இருக்கின்றன.

நல்ல அம்சத்தை தீயதாகவும், தீய அம்சத்தை நல்லதாகவும் சித்தரிக்க முயல்கின்றன.

இந்தப் படைப்புகளின் கதாபாத்திரங்கள் குணவிஷேஷமற்றவை. தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய பாத்திரங்கள் என்பதற்குப் பதிலாக ஏமாந்த பேர்வழிகளாக எதிர்த்துப் போராட உணர்வற்ற பேர்வழிகளாகக் காணப்படுகின்றன. இப் பாத்திரங்களில் அவநம்பிக்கையின் ரேகைகள் படர்ந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

சாதாரண மக்களின் துன்ப துயரங்களைச் சித்தரிப்பதாகக் காட்டி அவர்களைத் தவறான வழிக்கு இட்டுச்செல்கின்றன.

புராதனப் பண்பாட்டின் பெயரால் வர்க்கப்போராட்டத்தை நிராகரித்து வர்க்க சமரச வழிக்கு ஆதரவு தேடுகின்றன.

முதலாளித்துவ சுரண்டல் அமைப்பை இருட்டடிப்பு செய்து உழைப்பின் இன்பத்தை வர்ணிக்கின்றன.

இனவாத எதிர்ப்பு என்ற போர்வையில் வர்க்க நோக்கும் கோட்பாடுமற்ற தேசிய ஒருமைப்பாடு பற்றி பிதற்றுகின்ற அதே நேரத்தில் மக்களின் வளர்ந்து வரும் எழுச்சிகளையும், உணர்ச்சிகளையும் மழுங்கடித்து திசை திருப்பி சுரண்டும் கும்பலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற கருத்துக்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

இப்படியான அதிசய பாத்திரங்களையும், படைப்புகளையும் விழிப்புடன் விமர்சித்து அம்பலப்படுத்த வேண்டும். இது விமர்சனத்தின் பிரதான அம்சமாகும்.

முதலாளித்துவ நிலப்பிரபுத்துவக் கொடுமைகளை சித்தரிக்க முயலும் படைப்பாளிகள் சிலர் குட்டி முதலாளித்துவ சிந்தனைப் போக்கினால் அந்தப் பாத்திரங்களை சரியான இடங்களுக்கு இட்டுச் செல்ல முடியாமல் குத்து, வெட்டு என்ற அதி தீவிர பயனற்ற வெத்து வேட்டுக் கோஷக் கொள்கையிலும், நடைமுறையிலும் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி நிதானமான மக்கள் இயக்கங்களை சீரழிக்கவே உதவி செய்கின்றனர்.

சில படைப்பாளிகள் மக்களின் வெகுஜன ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்களை அம்பலப்படுத்தும் பாத்திரங்களாக படைக்கின்றார்கள். இது உண்மையில் தனி ஒரு சிலரை அம்பலப்படுத்துவதல்ல மக்கள் இயக்கம் முழுவதையும் இழிவுபடுத்துவதாகும். ஊழியர்கள் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி முழு இயக்கங்களிலும் அவநம்பிக்கையை உண்டுபண்ணி எதிரி வர்க்கத்திற்கு உதவும் ஒரு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் நேச சக்திகளினதும் குண விஷேசங்களை இவர்கள் தெரிந்தும், புரிந்தும் கொள்ளாததுதான் காரணம்.

உழைக்கும் மக்களும் அவர்களது ஊழியர்களும் அம்பலப்படுத்தும் பாத்திரங்களாக இருக்க முடியாது. நிய சக்திகளின் அடக்கு முறையும், அவர்கள் செலுத்தும் அதிகாரமும், செல்வாக்கும் அம்பலப்படுத்த வேண்டியவையாகும்.

மேற்குறிப்பிட்ட படைப்பாளிகள் தமது பலவீனங்களை களைந்து, தவறுகளைத் திருத்தி, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் புதிய சமுதாயத்திற்காக உறுதியுடன் உழைக்கும், போராடும் பாத்திரங்களையே படைக்க வேண்டும்.

மேற் கூறியவற்றின் அடிப்படையில் விமர்சனங்கள் அணுகப்படவேண்டும்.

அதுவே படைப்புகளைச் செழுமைப்படுத்தும் உண்மையான விமர்சனங்கள்.

— ஆசிரியர் குழு

தாயகம்

மலர்: 1 | 1974 கார்த்திகை | இதழ்: 5

## வாசகர்களுக்கு

அச்சகத்தில் ஏற்பட்ட எதிர்பாராத தாமதத்தினுல் தாயகம் உரிய காலத்தில் வெளிவர முடியவில்லை என்பதை வாசகர்களுக்கு தெரிவிக்கின்றோம். தொடர்ந்து உரிய காலத்தில் தாயகம் வெளி வரும் என்பதை அறியத்தருகின்றோம்.

## விற்பனையாளர்களுக்கு!

தாயகம் இதழ்களின் விற்பனைப் பணத்தை ஒழுங்காக அனுப் பாத விற்பனையாளருக்கு தாயகம் தொடர்ந்து அனுப்பப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி

---

முகவரி:

"தாயகம்"
54/16, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

★

படைப்பாளிகளிடமிருந்து

தரமான
சிறுகதைகள்
கவிதைகள்
கட்டுரைகள்
வரவேற்கப்படும்

— ஆசிரியர் குழு

தாயகத்திற்கென அனுப்பப் படும் காசோலைகள், காசுக்கட் டளைகள், மணிஓடர்கள், என் பவை 'நிர்வாகி' எனக் குறிப் பிடப்பட்டு தாயகம் முக வரிக்கு அனுப்புதல் வேண்டும்.

✻

சந்தா விபரம்

ஆண்டு சந்தா — 10-00
ஆறு மாதம் — 5-00

கட்டுரை

— எஸ். யோகணதாஸ்

# புதிய ஜனநாயகம்

புதிய ஜனநாயகம் என்று குறிப்பிடும்போது நாம் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியின் விளைவாகத் தோன்றும் அரசு அதிகாரத்தையே கருதுகின்றோம். இன்று புதிய ஜனநாயகம் பற்றிய விஷயத்தை எமது நாட்டிலும் அல்லது வேறு நாடுகளிலுமுள்ள சிலர் தங்களுடைய வசதிக்கேற்றவாறு திரித்தும், மாற்றியும் விவாதங்களை முன் வைக்கின்றனர். பெயரளவிலான சில மாற்றங்களைச் செய்துவிட்டு அதைப் புதிய ஜனநாயக மாற்றமெனவும் அடுத்து சோஷலிசத்திற்கான மாற்றத்தை நோக்கி... என்ற தவறான கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்ப சிலர் முயற்சிக்கின்றனர். இது முழுக்க முழுக்க விழல்தனமானதும்..., எமது நாட்டில், பழைய ரக ஜனநாயகப் புரட்சி சரி. அல்லது புதிய ஜனநாயகப் புரட்சி சரி எதுவுமே நடைபெறவில்லை. இச் சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விசயத்தை தெளிவாக்கவேண்டும். எந்தப் புரட்சி பற்றிப் பேசினாலும், உண்மையில் ஒரு புரட்சி என்பது சமுதாயத்தில் பலாத்காரமூலம் நடைபெறும் வர்க்க உறவிலானதோர் மாற்றத்தையே குறிப்பிடுவதாகும். சுற்றிச் சுழல்வதுதான் புரட்சி என்றால் 24 மணி நேரத்திற்கொரு தடவை தனது அச்சைச் சுற்றிச சுழன்று வரும் பூமியும் புரட்சி செய்கின்றது. ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கம், பலாத்கார மூலம் தூக்கியெறிவதே புரட்சியாகும்.

எனவே புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் உருவாக்கப்படும் புதிய ஜனநாயகமும் அடிப்படையில் பலாத்கார அம்சம் கொண்டதாகும். இந்த அம்சத்தைக் கொள்ளாத எந்த ஒரு நிகழ்ச்சியோ மாற்றமோ அல்லது நடவடிக்கையோ புதிய ஜனநாயகமென்று கூறுவதற்கு அருகதையற்றவையாகும்.

நிலப்புரபுத்துவ முறைக்கு மாறியபின்னர் சமுதாயத்தில் இரண்டு வகைப் புரட்சிகள் ஏற்பட முடியுமென்று மார்க்சிசம் கூறுகின்றது. முதலில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியொன்று ஏற்படவேண்டும். அதன் நோக்கம் நிலப் பிரபுத்துவத்தைத் தூக்கியெறிந்து அதனிடத்தில் முதலாளித்துவத்தை ஸ்தாபிப்பதாகும். தொழிலாளி வர்க்கம் ஒரு அரசியல் சக்தியென்ற முறையில் அரங்கில் தோன்முத ஒரு கட்டத்தில் இந்தப் புரட்சி முதலாளி வர்க்கத்தினால் தலைமைதாங்கப் பட்டது.

இங்கிலாந்திலும், பிரான்சிலும் 17-ம், 18-ம் நூற்றுண்டுகளில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகளின்போது இதுதான் நிகழ்ந்தது. 1789-ல் நடந்த மகத்தான பிரான்சுப் புரட்சி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் மிகவும் தலை சிறந்த உதாரணமாகும். இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரு நாடுகளிலும் இப்புரட்சிகளின் போது தொழிலாளி வர்க்கஇயக்கம் ஆரம்பக் கட்டத்தில் இருந்தது அது முதலாளித்துவவர்க்கத்தால் நடத்தப்பட்ட புரட்சியில் பங்கு கொண்டது. ஆனுல் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத்தை வெற்றி கொண்டபின் அதே முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்க இயக்கததை நசுக்க ஆரம்பித்தது.

இரண்டாவதுபுரட்சி சோஸலிசப் புரட்சியாகும். இப்புரட்சி முதலாளித்துவ வளர்ச்சியின் கணிசமான அளவு ஒரு நீண்ட கால கட்டத்திற்குப் பின் அதாவது சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கம் ஒரு பிரதான சக்தியாக வளர்ந்தபின் ஏற்படும்ஒரு புரட்சியாகும். இப்புரட்சியின் நோக்கம் முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து அதனிடத்தில் சோஸலிசத்தை ஸதாபிப்பதாகும்.

20ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் லெனின் அவர்கள் ரஷ்யப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைக்கு வந்தபோது இத்தத்துவத்தைச் சற்று மாற்றியமைத்தார். ருஷ்யாவில் நிலவிய, நிலப்பிரபுத்துவ கருப்பைக்குள், முதலாளித்துவம் வளரத் தொடங்கி ஒன்று செறிந்த தொழிலாளி வர்க்கத்தை உருவாக்கிய போதிலும் ருஷ்யா இன்னும் ஒரு நிலப்பிரபுத்துவ நாடாகவே இருந்தது. ருஷ்யாவை ஜார் மன்னனே ஆட்சி புரிந்தான். இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புர

---

## வாய்ச்சவடால் வீரர்கள்

ஆதிக்க வெறிபிடித்த
நிலஉடைமையாளரின்
இரத்தக் கறைபடிந்த
ஒலைச் சுவடிகளை
அழித்தொழித்திடும்
நன்ருள்
எங்கள் வர்க்கமதன்
பொன்ருளென்று
வாய்கிழியக் கத்திவந்த
வாய்ச்சவடால் வீரர்கள்.
பெரும்புயலல்ல......
சிறுகாற்றடித்ததுமே
சிந்தைகலங்கி
அஞ்சிநடுங்கி
மரணபயமுற்று
அன்று
நாறிடும் இக்கொடுமை
மாறிடல் வேண்டுமெனில்
தோன்றிடல் வேண்டுமென்ற
புதுயுகக் குழந்தையது
இன்று
பிறந்து
வளர்ந்து
நடைபயின்று வருவதாக
வாய்கிழியக் கத்துகின்ருர்

— மானிடன்

ட்சி வெற்றிகண்டபோதிலும் ருஷ்யாவில் நிலப்பிரபுத்துவமே நிலவியது. ஆகவே ருஷ்யாவில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றி தாமதித்த படியாலும், அந்த நாட்டில் பலமான புரட்சிகர இயக்கம் வளர்ந்த படியினாலும் ருஷ்யாவில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் சோசலிசப் புரட்சிக்கும் இடையில் சீனப் பெருஞ்சுவர் ஒன்று இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது மட்டுமல்ல புரட்சியின் இரண்டு கட்டங்களிலும் தொழிலாள வர்க்கத்தின் தலைமை ஸ்தாபிக்கப்பட்டால் ஒன்றிலிருந்து மற்றதுக்குத் தொடர்ந்து செல்வது சாத்தியமாகும் என்ற கொள்கையை லெனின் முன் வைத்தார்.

இதுதான் உண்மையில் ருஷ்யாவில் நடைபெற்றது. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி 1917 பெப்ரவரியில் வெடித்தெழுந்தது. ஒரு புறத்தில் கெரன்ஸ்கியின் தற்கால அரசாங்கம் மறுபுறத்தில் தொழிலாள விவசாயிகள் படையினரின் சோவியத்துக்கள் என்ற வடிவத்தில் குறுகியதோர்கால இரட்டையதிகாரம் நிலவியது. ஆனால் லெனினைத் தலைவராகக் கொண்ட போல்ஷ்விக்குகளின் தலைமையில் அதேயாண்டு அக்டோபரில் சோசலிசத்திற்கான மாற்றம் சாத்தியமாகியது.

இதிலிருந்து நாம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்கும், சோஸலிசப் புரட்சிக் கட்டத்திற்குமிடையில் ஒரு சீனப் பெருஞ்சுவரின்றி முன்னையது பின்னையதுடன் ஒன்றிணையும், தத்துவத்தையும், இரண்டு புரட்சிக் கட்டங்களுக்கும் தொழிலாளி வர்க்கத் தலைமையில் அவசியம் பற்றிய தத்துவத்தையும் லெனின் தான் முன்வைத்தார் என்பதைக் கண்டு கொள்ள முடியும்.

தலைவர் மாசேதுங் அவர்கள் இத் தத்துவத்தை ஆசிய நாடுகளில் நிலவிய நிலமைக்கேற்ப ஆக்க பூர்வமான முறையில் பிரயோகித்து புதிய ஜனநாயகப் புரட்சிபற்றிய தத்துவத்தை வகுத்தார். பல ஆசிய நாடுகளை ஏகாதிபத்திய வாதிகள் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தமை, இந்த நாடுகளில் நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கான வரலாற்றுரீதியிலான மாற்றம் ஏற்படுவதைத் தடை செய்தும் வேறு வார்த்தைகளில் கூறுவதானால் 17-ம், 19-ம் நூற்றூண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நிறைவேற்றிய பணிகள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் காரணமாக இந்நாடுகளில் ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவத்தை தமக்குச் சாதகமான சமுதாய அடிப்படையாகக் கொண்டு, நிலப்பிரபுத்துவத்துடன் சேர்ந்து மக்களைக் கூட்டாகச் சுரண்டியது. ஆகவே நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கூட்டமும் பிரிக்க முடியாதவையாகின.

எனவே இந்நாடுகளில் புரட்சியின் முதல்கட்டத்தின் நோக்கம் ஏகாதிபத்தியத்தையும் நிலபிரபுத்துவத்தையும் தூக்கியெறிந்து உண்மையான சுதந்திரமான நேர்மையான ஜனநாயகத்தை அடைய முயல்வதாகும். இதே பணிகளைத்தான் பழைய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகள் ஆற்றின. ஆனால் தற்போது புதிய நிலைமைகளில் இப்பணிகளை தொழிலாளி வர்க்கம் ஆற்றவேண்டியுள்ளது. முதலாவதாக உலக சோஷலிசப் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதற்குப்பின் நடைபெறும் எந்தப்புரட்சியும் உலக சோஷலிசப் புரட்சியின் ஓர் அங்கமாகத்தான் இருக்க வேண்டும். இரண்டாவதாக பழைய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாய் இருந்ததுபோலல்லாமல் முதலாளித்துவ வர்க்கம் இனிமேலும் புரட்சியின் தலைமை ஸ்தானத்திலிருக்க முடியாது.

ஏனெனில் தொழிலாளிவர்க்கம் வளர்ந்து பலம் பொருந்தியதாய் இருக்கின்றது. ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து தானும் அடித்துச் செல்லப்பட்டு விடுவேனோ என்று ஒவ்வொரு நாட்டு முதலாளி வர்க்கமும் அஞ்சுகின்றது. எனவே தொழிலாளி வர்க்கம் புரட்சியின் தலைமைச் சக்தியாக வளர்வதை முதலாளி வர்க்கம் விரும்பவில்லை. இம்முதலாளி வர்க்கம் தலைமை ஸ்தானத்தில் இருக்கும் பட்சத்தில் சமரசங்களையே விரும்புகின்றது. மூன்றாவதாக பழைய ஜனநாயகப் புரட்சியாய் இருந்தது போலல்லாது புதிய ஜனநாயகப் புரட்சி முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளத் தேவையில்லை. முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் போக்கின் முன் செய்ய முடியும். எனவே இந்தப் புதிய நிலைமையின் கீழ் பழைய வகை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி ஏற்படுவது சாத்தியமல்ல. ஆகவேதான் மாஓ அவர்கள் இதனைப் புதிய ஜனநாயகப் புரட்சியெனக் குறிப்பிட்டார். மக்கள் ஜனநாயகப்புரட்சி என்பதும் இதற்கு இன்னொரு

---

## புதிய ஜனநாயகம்

அரிசி, மா, சீனி
அத்தனையின் விலைதனையும்
நாளுக்கு நாள்
கூட்டியும்
காலத்துக்கு காலம்
உலக வங்கியின்
ஆணைக்கு
அடிபணிந்து
[illegible] சட்டமூலம்
எமையடக்கியாளுகின்ற
அரசாங்கமதை
மக்கள் அரசாங்கமென்றும்
இன்று நடப்பது
புதிய ஜனநாயக
புரட்சியென்றும்
வாய்கிழியக் கத்துகின்ற
தத்துவத் தலைவர்கள்
இருக்கவேண்டிய இடம்
நிச்சயமாய்
விசர்மாற்றிடும்
ஆஸ்பத்திரியேதான்

— மாலினிடன்

பெயர் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம், சோஸலிசப் புரட்சிக் கட்டம் ஆகிய புரட்சியின் இரண்டு கட்டங்களும், புரட்சியின் இரண்டு தனித் தனியான தெட்டத் தெளிவான கட்டங்கள் என்பதை வலியுறுத்த வேண்டும். ஒரு கட்டம் மற்றதில் இருந்து தொடங்கி, தடையிடின்றி முன் செல்கிறதென்பது உண்மை. ஆனல் இந்த இரண்டு கட்டங்களையும் ஒன்றுக்கிக் குழப்புவதையும், எல்லாப் பணிகளையும் ஒரே நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்ற தவருன தத்துவத்தையும் நாம் நிராகரிக்க வேண்டும். இரண்டு கட்டங்களுக்குமிடையில் பெருமிடைவெளியொன்றை உருவாக்க முயற்சிக்கும் தத்துவமும் அதே போலே தவருனதாகும். சீனவில் நடைபெற்றதுபோல் தொழிலாளி வர்க்கம் இதர ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகளுக்கு மேலாக தனது தலைமையை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்திலை முதலாவது கட்டம் தலையீடு இன்றி இரண்டாவது கட்டத்திற்கு முன்னேற முடியும்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளர்கள், விவசாயிகள் புத்திசீவிகள் ஆகியோரின் ஐக்கிய முன்னணி ஒன்றினல் பொது எதிரிகளான அந்நிய ஏகாதிபத்தியம், நிலபிரபுத்துவம் தரகு முதலாளித்துவம் ஆகியவற்றை தோற்கடிப்பதன் மூலம் தான் புதிய ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை பூரணமாக நிறைவேற்றப்பட முடியும். இது புதிய ஜனநாயகம் பற்றிய கொள்கையின் அடிப்படை உண்மையாகும்.

★

# சோஷலிசத்தை நோக்கி...

இந்தியாவின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநிலங்களில் மேற்கு வங்காளமும் ஒன்று. இம்மாநிலத்தில் 53 சிறைச்சாலைகள் உண்டு. இவற்றில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 25,000. இவ்வெண்ணிக்கையில் 4,000 பேர் சாதாரண கைதிகள். மிகுதி 21,000 பேர்களும் அரசியல் கைதிகள். இவ் 21,000 பேர்களும் இந்தியாவின் சாதாரண பொதுமக்களேயாவர்.

இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் பல்லாயிரம் அரசியல் கைதிகள் உள்ளனர். காந்தி பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தை இன்னும் அமுல் நடத்தி வரும் இந்திராவின் ஆட்சி சோஷலிசத்தை நோக்கிச் செல்கிறதாம்.

நெடுங்கதை

★ இரா. முத்துச்சாமி

# ஆறடி நிலமும் இரண்டு தேயிலைச் செடிகளும்

மாரியின் தகப்பன் பூவான் இறந்து மூன்றாவது நாள் சாவு வீட்டுக்கு வந்திருந்த சொந்தக்காரர்கள் எல்லோரும் போய் விட்டார்கள். பூவான் திடீரென்று நோய்வாய்ப்பட்ட நாள் தொடக்கம் மாரிக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை. ஐந்து நாட்களாக சரியான தூக்கமும் இல்லை. குளித்துவிட்டு வந்து தேப்பை ரொட்டியை சாப்பிட்டவுடனேயே கொட்டாவி கொட்டாவியாக வந்தது.

காம்பராவில் குறுக்கும் நெடுக்கிலுமாக படுத்திருந்த பிள்ளைகளைத் தாண்டி ஒரு மூலையில் சாக்குப் படங்கை விரித்துப் போட்டு 'சிவ சிவா' என்று கூறிக் கொண்டே கை கால்களை நீட்டினான் மாரி. மாரியின் மனதில் என்றுமில்லாத ஒரு நிம்மதி. தகப்பன் இறந்த சோகத்தையும் விட, உடல் களைப்பையும் மீறிக் கொண்டு ஒரு மன நிறைவு.

'என்ன இருந்தாலும் இந்த பஞ்ச காலத்துல இந்த மாதிரி ஒரு வெசயத்தை நல்லா செஞ்சு முடிக்க இந்த லெச்சுமி தோட்டத்தில யாரால முடியும்? செலவுதான். எல்லாமா ஆறு நூறு ரூவா செலவு. தள தளன்று இருந்த கன்னுகுட்டிய விக்க மனமில்லதான். ஆனா என்ன செய்றது?''

''முன்ன எல்லா நகை நட்டுன்னு ஏதாவது இருந்திச்சி. வட்டி கட்ட முடியாம அதையெல்லா அந்த செட்டியார் அறியாயமா முழுங்கிட்டான், நாசமாப் போறவன்'' காம்பராவின் மறுமூலையில் கந்தலைப் போர்த்துக் கொண்டு படுத்திருந்த அவன் மனைவி சின்னபிள்ளை கூறினாள்.

''இப்ப யார் வூட்டுலேதான் நகை இருக்கு. எல்லாம் அடவு வச்சு சாப்பிட்டாச்சு. உம்... கஷ்டகாலம், நானு அதை சொல்ல வரல்ல. கன்னுகுட்டி வித்த காசு போக மத்த வெங்கல சாமான்களையும் வித்து ஒரு மாதிரி சரிக்கட்டியாச்சு. இன்னும் நூத்தி அம்பது ரூவா

பாக்கி. கடைக்கார மொதலா ளிக்கு குடுக்கனும்.

அரைத் தூக்கத்திலிருந்து சின்னப்பிள்ளை கூறினாள். 'வட்டி கூட முன்ன அதை எப்பிடியா வது அடச்சிடனும்''

''ஆ...... அதுக்கெல்லா நானு ஒரு 'பிளான் வைச்சிருக் கேன்.''

என்னு ஒனக்கு? எழவு வீட் டில கூட சந்தோசமா இருக்கு?''

''இல்லாம பின்னே, நாங்க எப்புடி கேதத்தை இவ்வளவு செறப்பா நடத்தினேன்னு எல் லாமே கேட்டாங்க. பெரிய கணக்கபுள்ள கூட கேட்டாரு, இதெல்லா எப்புடி நடத்தி னேன்னு. ஏதோ மாட்ட வித்து நடத்தினேனுங்கன்னு சொன் னேன். ஆனா ஒன்னு. எங்கப்ப னுக்கு மட்டும் நல்ல மொறை யிலே இந்த வெசயங்களை நடத் தல்லேன்னு அப்பொறம் நானு உயிரோட இருந்து பிரயோசன மில்லே ..... ஆமா.''

பூவானின் மரணச் சடங்கு களுக்கு வெளியூரிலிருந்து மேளம் கொண்டுவந்திருந்தான் மாரி. டவுனிலிருந்தும் ஆட்கள் வந்தி ருந்தார்கள். தோட்டக்கடை முதலாளி, கணக்கப்பிள்ளை, சின்ன கிளாக்கர், தோட்டப் பள்ளிக்கூடத்து வாத்தியார் என்று பல பிரமுகர்களும், வந் திருந்ததில் மாரிக்கு மட்டற்ற மகிழ்ச்சி; பெருமையும் கூட. எல்லாவற்றையும் விட கேதத் துக்கு அறுநூறு ரூபாய் செல வளித்து சிறப்பாகக் காரியங்களை செய்தது குறித்து மாரி ஒரு மன நிறைவு பெற்றான்.

அவன் அப்பன் பூவான் வாழ்ந்த வாழ்க்கை என்ன? அவ னுக்குத் தோட்டத்தில் இருந்த மதிப்பென்ன? பூவானின் அப்ப னும் அதே தோட்டத்தில் வேலை செய்தவன் தான். அதே தோட்டத்தில் பிறந்த பூவான் அறுபது ஆண்டு காலமாக ராஜாவாகத்தான் வாழ்ந்தான். பதினாறு வயதிலிருந்து அதே தோட்டத்தில் வேலை செய்து ஓய்வும் பெற்றான். அவர் காலத் தில் அவருக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் இன்று தோட்டத்தில் யாருக்கும் இல்லை. பூவான் என்றால் பெரிய கணக் கப்பிள்ளை கூட 'வா பூவான் வந்து உக்காரு' என்று வீட்டுள் அழைத்து உபசரிப்பார். தோட் டவேலைபற்றி அடிக்கடி அவனி டம் ஆலோசனை கேட்பார். பெரிய கணக்கப்பிள்ளையை சிறு பிராயத்திலிருந்து பூவான் அறி வான். தோட்டத்துரை மட்டு மென்ன? அவனுக்கும் பூவானி டம் மதிப்பு இருந்தது.

''அவர் ஐஞ்சாறு வெள்ளைக் கார தொரைமார் கிட்டே வேலை பாத்தவர். ஸ்டோக்ஸ் தொரை இன்னைக்கு வந்தவர். இவரை அப்பா ஒரு துட்டுக்கும் மதிச்சதில்லே. ஆனா தொரைக்கு அப்பாகிட்ட ஒரு மரியாதை. அப்பா நல்லா வேலை செய்வார். பத்துபேர் வேலையை தனிய

செஞ்சு முடிப்பார். அதனுல தொரைச்கும் சரி, கணக்கப்புள்ளைக்கும் சரி அவர் மேலே ஒரு அன்பு. அப்பேர்பட்டவருக்கு என்னுல இது கூட செய்ய முடியாட்டி நானு மகன்னு இருந்து என்ன புண்ணியம்?''

சின்னப்பிள்ளைக்கு தூக்கம் கண்ணை மூடியது. ஆனுலும் அவள் தூங்கமாட்டாள். கேட்டாள்: ''அது சரி, கடனைக் கட்டுறதுக்கு என்னு பண்ணப் போற?''

மாரி ஒரு முறை கனைத்துக் கொண்டான். ''தோட்டத்துலே கடவுள் புண்ணியத்திலே எனக்கு நல்ல பேர் இருக்கு. யாரக் கேட்டாலும் மாரின்னு நல்லவனுன்னு சொல்லுவாங்க. ஏன்னு நானு மத்தவங்களைப் போல தப்பு தண்டாவுக்குப் போறதில்லே. சங்கஞ்சேக்கவோ சண்டை புடிக்கவோ போறதில்லே. தொரை கடவுள் மாதிரி. இதுவரைக்கும் ஒரு கொறையுமில்லாம எங்க குடும்பத்தைக் காப்பாத்திட்டார்.

''கடனை எப்படி அடைக்கிறது?'' சின்னப்பிள்ளை மீண்டும் கேட்டாள்.

''பெரிய தொரை நல்லவரு. நல்லபடியாக் கேட்டா செய்வாரு. போன வருசம் நடந்த ஸ்ரைக்'ல நம்ம சங்கத்துக் காரங்க சங்கத்துட கட்டளையயும் மீறி வேலைக்கு போகாம நின்னுங்க. நானு மட்டும் பெரட்டு களத்துக்குப் போனேன். ஆனு தொரை வேலை குடுக்கல்லே. அப்பவே சொன்னரு; மாரி நீ நல்லவன். நல்லா வேலை செய்றதாக் கேள்வி. மத்தவங்களோட சேந்து கெட்டுப் பொயிருத. நல்லா வேலை செஞ்சாத்தானே தோட்டத்துக்கு லாபம்? அப்பத்தானே ஒனக்கும் வேலை ஒழுங்காகக் கெடைக்கும். அவர் சொன்னது பொய்யில்லே. அதனுல்தான் சின்னக்காய்ச்சல்னுக்கூட பாக்காம ஒழுங்கா வேலைக்குப் போறேன்..''

''அது சரி கடனை என்ன செய்றது? ஒன்று கேட்டா ர் வேறே என்னென்னத்தையோ ஒலர்புறியே தன்னையறியாமல் தூங்கிப் போகுமுன் ரகசியத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவள் ஆசை.

''நம்ம பெரிய புள்ள தனம் இருக்குதில்லே அதுக்கும் வயசு பதினெட்டாகியும் இன்னும் பேர் பதிய இல்லே. அதுவும் வீட்டோட சும்மா இருக்குது. நானு நாளைக்கே பெரிய தொரை கிட்ட போய் அவரோட காலைக் கையயாவது புடிச்சு தனத்துக்கு பேர் பதியச் சொல்லப் போறேன். பேர் பதியாட்டியும் பரவாயில்லே. கைக்காசு வேலை யாவது கேக்கப் போறேன். பெரிய தொரைக்கு அப்பாவையுந் தெரியும். அதனுல நிச்சயம் குடுப்பாரு. அவளுக்கு கைக்காசு வேலையுங் கெடச்சி எனக்கும் கொந்தராப்பும் கெடச்சிட்டா ஒரு வருசத்துலே மொதலேயும் சேத்துக் கட்டிப்புட லாம்''

''மாமா உயிரோட இருக்கிற நேரத்திலே அவர் கண்காண இதுக்கு கல்யாணம் செஞ்சு வைக்க முடியாம போச்சு''

''பயப்புடாதே அதையும் செறப்பா நானு செஞ்சு வைக்கிறேனு இல்லியா பார். ஒழுங்கா வேலே செஞ்சு கொண்டு நாணயமா இருந்தம்னு தொரை எங்களை கைவிடமாட்டார். இன்னைக்கு மொளேச்ச பயல்கள் என்னுடான்னு.

எடுத்ததுக்கெல்லாம் 'ஸ்ரைக்' 'போராட்டம்' அடி ஒதைன்னு என்னதான் நடக்கும்? இவங்க உருப்பட மாட்டானுக. நாங்க எளியவங்க தொரைக்கிட்டே சண்டைக்கு நிக்க நாம யார்? எப்புடியோ அவங்களோட ஒத்துப் போனு என்னு கெட்டுப் பொயிரும்? கேக்கிற மாதிரி கேட்டா, அது நியாயமா இருந்தா தொரை ஏன் முடியாதுங்கிறுர்? ஆனு ஒன்னு நாமளும் இல்லாத பொல்லாததை எல்லாம் கேக்கக் கூடாது. எதுலே யும் ஒரு நியாயம் வேணும். நீ என்னு சொல்ற?......... சின்ன புள்ள... ஏ... சின்னபுள்ளே''...

மூச்சு விடாமல் பேசிவிட்டு மனேவி இருக்கும் பக்கமாகப் திரும்பிப் பார்த்தான். அவளிருந்த திசையிலிருந்து குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது. 'பாவம் அவளுக்கும் களேப்பு' என்று தனக்குள்ளே கூறிக் கொண்டான் மாரி.

இத்தனே சிறப்பாக தனது தகப்பனின் இறுதிச் சடங்கை செய்த போதிலும் அவன் மனதுள் ஒரு குறை இருந்து உறுத்திக் கொண்டே இருந்தது. இவ்வளவு பெருமை வாய்ந்த தனது

---

## புதிய ராட்சியம் அமைப்போம்..!

— பாண்டியூர் தட்சனு

உருக்குலேந்து போன
எங்கள்...
உழைப்பாளர்..., தோழர்காள்
நீங்கள்...
எலும்பும் தோலுமாய்
மெலிந்து; பொலிவிழந்து;
தோற்றமளிக்க
காரணம் என்ன...?
உங்கள் உழைப்பு
உறிஞ்சப்படுகிறது
அதோ...!
ஆலேகள்.. தொழிற்சாலேகள்
எங்கணும் உங்கள்
கூட்டமே!
உங்கள் உழைப்பை
உறிஞ்சிச் சுரண்டி
உயரும் கூட்டமே
உங்கள் எதிரிகள்...!
வாருங்கள்...!
உங்கள் உழைப்பை
உறிஞ்சி உயரும்
அவர்களே அழிக்க
புதிய ஜனநாயக
புரட்சிதனே செய்வோம்
புதிதாய் ராட்சியம்
அமைத்தே வெல்வோம்!

தகப்பனைப் புதைத்த இடத்தில் ஒரு கல்லறை கட்டி அதில் அவன பெயரைப் பொறிக்க வேண்டும்.

மத்தவங்களைப் போல நாலு மாசத்திலே பொதச்ச எடமே தெரியாமல் போவக் கூடாது. அவர் பேர் சொல் றத்துக்கு நெரந்தரமா ஒரு கல் லறை கட்ட வேணும். இப்ப முடியாட்டாலும் அடுத்த வருசம் தெைசம் வைக்கிறதுக்கு முன் எப்புடியாவது ஒரு கல் லறையை கட்டி முடிச்சிட்டா ஒரு அப்பனுக்கு மகன் செய்ய வேண்டிய கடமையை செஞ்ச திருப்தி எனக்கு உண்டாகும்.

இந்த எண்ணங்களிடையே மாரி தூங்கிப் போய்விட்டான்.

★

மறுநாள்! ஐந்து நாட்களுக் குப் பிறகு மாரியை மீண்டும் கவ்வாத்துக்குப் போட்டிருந்தார் கள். ஒரு கையால் தேயிலைச் செடியைப் பிடித்து கொண்டு மறு கையால் தனக்குள்ள முழுப் பலத்தையும் பிரயோகித்து கவ் வாத்துக் கத்தியால் ஓங்கி வெட் டும் போது ஒரு நாளுமில்லாமல் மாரிக்கு மேல் மூச்சு வாங்கி யது. ஐந்தாறு நாட்களாக ஓய் வில்லாமல் அங்குமிங்கும் ஓடித் திரிந்ததுதான் காரணம் என்று மாரி மனதுள் எண்ணிக்கொண் டான். கணக்கப்பிள்ளையின் கண் களிலிருந்து விடுபட்டதும் அசதி தீர ஒரு கல்லுப் பாறையில் உட்கார்ந்து விட்டான்.

மற்றைய தொழிலாளர்க ளும் ஆயசம் தீர ஒவ்வொருவ ராகக் குந்தினார்கள். தன் வீட்டு கேசத்தைப்பற்றி ஏதாவது பேசு கிறார்களா என்று உற்றுக் கேட் டான் மாரி.

''முன்னே எல்லா செடியை யும் ஒரு மணிக்கு முந்தியே வெட்டிப்போட்டு வீட்டுக்குப் போயிடலாம். இப்ப இருக்கிற சாப்பாட்டுக் கஷ்டத்தில ஆறு மணிவரைக்கும் வேலை செஞ்சா லும் முடியாது போல இருக்கு''. வாள் காரனாகயிருந்த சிவன் கூறி னான்.

''இதைச் சொன்னா தொ ரைக்கு வெளங்குனாத்தானே?'' முன்ன மாதிரி பதிமூணுபேரை த்தான் கவாத்துக்குப் போடு றாரு. ஒவ்வொருத்தருக்கு முந்தி மாதிரி இருநூத்திப் பத்து செடி யை வெட்டச் சொல்றாரு. எத் தினை பேர் மயக்கம் வந்து கவ் வாத்துக் காட்டிலே விழுந்திருக் காணுக.

சில நாட்களுக்கு முன் மேல் லயத்து முனியனும், வீரனும் கவ்வாத்துக் காட்டில் மயக்கம் போட்டு விழுந்தது உண்மை தான். அதன் பின்னும் கூட துரை மசியவில்லை. நாளொன் றுக்கு எப்படியாவது இருநூற் றுப் பத்து செடிகள் வெட்டப் படவேண்டும் என்பது அவரது கட்டளை.

''நம்மப்பத்தி தொரைக்கு என்ன கவலை'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் பெருமாள்

சாமி ''தோட்டத்துக்கு லாபம் கொறஞ்சிறக் கூடாதுங்கிறது மட்டுந்தான் அவரோட கவலை''

பெருமாள்சாமி எப்பொழுதும் இப்படித்தான். துரையையும் தோட்டச் சொந்தக்காரக் கம்பனியையும் எப்போதும் குறை சொல்லிக் கொண்டே இருப்பான். அதனால் யாரிக்கு அவனை அவ்வளவாகப் பிடிப்பதில்லை. தோட்டத்துரையும் தோட்டக் கம்பனியும் நன்ருக இருந்தால்தானே அவர்கள் ஆதரவில் வாழும் கூலிக்காரர்களான அவர்களுக்கு நல்லது? ஆனல் பெருமாள்சாமியோடு வாதிக்க முடியாது. அவன் நிறைய விஷயங்கள் தெரிந்தவன். அவனோடு தர்க்கம் செய்வதை மாரி எப்போதோ விட்டு விட்டான். எப்போது பார்த்தாலும் வர்க்கங்கள், சுரண்டல், முதலாளித்துவம், என்று புரியாத விஷயங்களையெல்லாம் பேசுவான். அவன் கூறுவதை புரிந்து கொள்ள மாரி முயற்சி செய்ததும் இல்லை.

இப்புடியே போனு நாம எல்லாம் சாக வேண்டியதுதான். பாரு. இந்த மாசத்து ஆட்டாமாவை இன்னும் குடுக்கல்ல. வூட்டுலே புள்ளகுட்டி எல்லாம் பட்டினி. அதோட கவ்வாத்து வெட்டுடான்னு தெப்பு எங்க இருந்து வரும்னு கேக்கிறேன்'' ஆறு புள்ளைகளுக்குத் தகப்பனை பழனி கூறினன்.

பழனி உண்மை நிலையைத் தான் கூறினன். கடந்த ஓராண்டுகாலமாக தோட்டத்தில் எல்லோரும் அரைப்பட்டினிதான். தோட்டத்தில் கொடுக்கப்படும் ரேஷன் சாமான்களும், கேப்பையும்' ஆட்டாமாவும் அரைவயிற்றுக்கே போதவில்லை. கடந்த இரண்டு மாதங்களாக கிழமைக்கு மூன்றுநாள்தான் வேலை கொடுத்தார்கள். சாமான்களுக்கான பணம் போக மாதத்துக்கு பத்து பதினைந்து ரூபாயே கைக்கு வந்தது. சிலருக்கு அதுவும் இல்லாமல் தோட்டத்துக்கு ஐந்து ரூபா பத்துரூபா பாக்கி நின்றது. ஆனல் இதற்கு தோட்டத்துரையை குறைகூறி என்ன பயன்? நாட்டை பஞ்சத்தில் அடிபடும் போது துரையும் கம்பனியும் என்ன செய்ய முடியும்? இது மற்றவர்களுக்கு விளங்கினல் தானே!

''பாவம் முனியாண்டி வூட்ட வுட்டுட்டு டவுனுக்கு பிச்சை எடுக்கப் பேனனில்லே, இந்த டவுனிலே பிச்சை எடுத்தா கௌரவமில்லேண்ணு பக்கத்து டவுனிலே பிச்சை எளக்கிருன், நானு இந்தக் கண்ணுவியே கண்ணுல பாத்தேன். அவனுக்கு முந்தி பிச்சையெடுக்கப் போனனே ஐயாவு அவன் ரெண்டு கெழமைக்கு முன்னே ரோட்டோரத்திலே செத்துக் கெடந்ததக் கண்டத மேக்கணக்கு ஆளுக சொன்னுங்க'' முனியாண்டியின் காம்பராவின் பக்கத்து காம்பராவில் இருக்கும் நடேசன் கூறினன்.

தம்மிடமிருந்த வெண்கலப் பாத்திரங்களையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் தோட்டத் தொழிலாளர்கள் விற்றுச் சாப்பிட்டாயிற்று. இனி? உயிர் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. வயோதிகர்களும் சிறுபிள்ளைகளுமே பட்டினிக்கு முதலில் பலியானார்கள். தோட்டத்தை விட்டு டவுனுக்கு பிச்சையெடுக்கப் புறப்பட்ட பட்டினிப் பட்டாளம் கடை வீதியில் கடைக்குக் கடை வீட்டுக்கு வீடு கை நீட்டிக் கொண்டு நின்றது. பலர் குளிர், மழை, பட்டினி ஆகியவற்றால் பாதையோரத்தில் பிராணனை விட்டார்கள். கருணையுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பிணங்களை லொரியில் கொண்டு போய் புதைத்தார்கள். "தொழிலுக்காக" குமரிகள் மானம் கெட்டு டவுனுக்கும் போய் வருகிறார்கள். தோட்டமே மெல்ல மெல்லச் செத்துக் கொண்டிருந்தது.

அவர்களுடைய அடுத்த நாள் பிரச்சினைகளைப் பற்றிய பேச்சு தொடர்ந்தது. தனது தகப்பனைப்பற்றியும் சேதனைப் பற்றியும் ஒரு நல்ல வார்த்தையாவது பேசுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாரிக்கு ஏமாற்றமாக இருந்தது.

"பேசிப் பேசி என்னத்தைக் கண்டாச்சு? சும்மா ஒக்காந்திருக்காம எந்திரிச்சி வேலையைப் பாருங்கடா" என்று கூறிக் கொண்டே கவ்வாத்துக் கத்தியை எடுத்துக் கொண்டு எழுந்தான் மாரி.

கைகள்தான் கவ்வாத்து வெட்டிக் கொண்டிருந்தனவே தவிர மாரியின் மனம் மகள் தனத்துக்கு கைக்காசு வேலை வாங்கித் தருவதைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. துரை மாரிக்கு ஒருபோதும் இல்லை என்று சொல்லமாட்டார். இன்று சாயந்தரம் துரையை சந்திக்கப் போகும்போது கொல்லையில் விளைந்திருந்த வாழைத்தாரில் பெரிய சீப்பு ஒன்றைக் கொண்டுபோக வேண்டும். கைக்காசு வேலைக்கு துரை சரியென்று சொல்லிவிட்டால்

---

## புதிய நாடகம்

நாங்கள் புதியதொரு
நாடகம் பயிலுகின்றோம்...

உழைப்பவரே பாத்திரமாய்
உழைப்பைச் சுரண்டுவோரை
அழித்து, மக்களாட்சி
அமைப்பதுவே முடிவாய்

நாங்கள் புதியதொரு
நாடகம் பயிலுகின்றோம்...

எங்கள் ஈழத்தின்
எல்லா நகரங்களிலும்
சந்து பொந்து முதல்
சகல கிராமங்களிலும்
காலம் கனிந்ததென்று
சொல்லுமொரு தேதியிலே
வாழத்துடிப்பவர் நாம்
அரங்கேற்ற வென்றே

நாங்கள் புதியதொரு
நாடகம் பயிலுகின்றோம்...

— மணிமைந்தன்

மெல்ல கொந்தராப்பு பற்றியும் ஒரு வார்த்தை கூறிவைக்கவேண்டும்.

''மாரி'' என்று அழைத்துக் கொண்டே ஓடிவந்தான் துரையின் தோட்டக்காரனான சின்னான். ''மாரி வேலைமுடிஞ்ச கையோட ஒன்ன பெரியதொரை வரச் சொன்னாரு''

''என்ன வெசயம்?'' என்று மாரி திக்கித் திணறி கேட்குமுன் சின்னான் மலையை விட்டே போய் விட்டான்.

மாரியின் உடல் வெடவெட வென்று ஒரு முறை நடுங்கி நின்றது. பெரியதுரைக்கு கொஞ்ச வயசுதான். ஆனால் கண்டிப்பானவர். அவரே வரச் சொல்லி ஆள் அனுப்புவதென்றால்...

''மாரி பெரியதொரை ஆபீசுக்கு வரச் சொன்னார்னா ஏதோ வெசயமிருக்குன்னு அர்த்தம்'' என்றான் பெருமாள் சாமி. மாரிக்கு தனது மனமே பேசுவது போலிருந்தது. ஆனாலும், இவன் வாயிலே நல்ல வார்த்தையே வராது என்று மனதுள் பொருமினான்.

மாரிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. 'என்னவா யிருக்கும்?' என்று ஓராயிரம் தடவை தன்னையே கேட்டுக் கொண்டான். அவனை அறியாமல் ஏதாவது தப்பு பண்ணியிருப்பானோ? சே; இருக்காது. ஆனால் பெரிய துரை சும்மா வரச் சொல்ல மாட்டார். வேலையை நிறுத்திவிட்டு ஆபீசுக்குப் போய் வருவோமா என்று கூட எண்ணினான். ஆனால் அதற்கு மணி போட்டுவிடுவார்கள்.

திடீரென்று ஒரு யோசனை 'ஒரு வேளை அப்பன் ஆட்டு சாவைப் பத்தித்தான் துக்கம் விசாரிக்கக் கூப்புடுறாரோ? இருக்கும்... இருக்கும்.. பெரிய தொரைக்கு எழகின மனசு அப்பனைப் பத்தி அவருக்கு நல்லாத் தெரியும்.

புதிய தெம்புடன் மாரி தேயிலைச் செடிகளை வெட்டத் தொடங்கினான். ஆனாலும் இதயத்தின் ஒரு மூலையில் 'ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது' என்ற அச்சம் குடைந்துகொண்டே இருந்தது.

★

''என்னென்னு நெனச்சமேன். ஒங்க அப்பனைப் புதைக்கிறதுக்கு ரெண்டு தேயிலைச் செடியை புடிங்கிட்டியாமே. இது என்ன ஒன் அப்பன் பாட்டனோட தோட்டமா, நீ நெனச்ச மாதிரி எல்லாம் செய்றது?'' என்று கத்தினார் பெரிய துரை. டவுனில் உள்ள இந்தக் காலத்து பொடியன்கள் போல நீண்ட தலைமயிரும் கிருதாவும் ஸ்டோக்ஸ் துரைக்கு இருந்தது. நான் 'பேசிக்கிட்டே போறேன். நீ என்ன சும்மா முழிக்கிறே?'

மாரி உண்மையில் விழி பிதுங்க பேச்சின்றித்தான் நின்

றுன். அவனுக்குப் பேச்சு வரவில்லை.

இங்க பார் ஒனக்கு வேண்டியதெல்லாம் இங்கே செய்ய முடியாது. இது கம்பனித் தோட்டம். இந்த தேயிலைச் செடிகள் நூறு வருஷமா விளையுது. நீ செஞ்ச டெமெஜுக்கு இருவது ரூபா தெண்டம் போட்டிருக்கேன். இனிமே இப்பிடி செய்யாதே. போ மேன்...போ.. இடியட்''

''மன்னிப்புக் கேள், மன்னிப்புக்கேள்'' என்று பெரிய கிளாக்கர் முழங்கையால் இடித்துவிட்டு கிசு கிசுத்தார். இவ்வுலகுக்கு வந்த மாரி என்ன செய்கிறோம் என்ற நினைவு இன்றி, உடலை இரண்டாக மடித்து சலாம் போட்டவாறு ''மன்னிச்சிடுங்க சாமி'' என்றான்.

துரை ஆங்கிலத்தில் பெரிய கிளாக்கரை நோக்கி ஏதோ கூறினார். தான் ஆபீசை விட்டு வெளியே வந்ததும் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கியதும் ஏதோ கனவில் நடைபெற்றதைப் போல இருந்தது மாரிக்கு

என்ன நடந்தது என்பதைக்கிரகித்துக் கொள்ளவே மாரிக்கு சற்று நேரம் எடுத்தது. தன்னையறியாமல் பிள்ளை மடுவத்தையும் தாண்டி நடந்து வந்துவிட்டான்.

அந்தத் தோட்டத்தில் இறப்பவர்களின் உடலைப் புதைப்பதற்காக பாதை ஓரமாக ஒரு சிறு துண்டு நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. தகப்பனுக்கு கல்லறை ஒன்று எழுப்ப வேண்டும் என்ற ஆசையில் மற்றவர்களைத் திரும்பத்திரும்ப புதைத்த அதே இடத்தில் புதைக்க விரும்பாமல் அவருக்கு பிரத்தியேகமாய் அந்நிலத்தின் ஒரு மூலையில் மாரி தகப்பனின் உடலைப்புதைத்தான். குழி தோண்டும்போது அருகிலிருந்த இரு தேயிலைச் செடிகளைப் பிடுங்க வேண்டியதாயிற்று.

தேயிலைச் செடிகளைப் பிடுங்கியது ஏதோ உண்மைதான். ஆனால் தனது ஆயுள் பூராவும் அத்தோட்டத்துக்கு சேவகம் செய்த பூவனின் பிணத்தைப் புதைப்பதற்கு இரண்டு தேயிலைச் செடிகளைப் பிடுங்கிவிட்டால் அது ஒருகுற்றமா? துரை விதித்த அபராதம் பெரிதாகத் தெரியவில்லை மாரிக்கு. அவன் பட்டிருந்த கடனை அடைப்பதற்கு அவன் தீட்டியிருந்த திட்டம் நிறைவேறாதது பற்றியும் அவ்வளவு கவலையில்லை. ஆனால் ஒகோவென்று வாழ்ந்த அப்பனுக்கு இப்படி ஒரு அவமானமா? இரண்டு தேயிலைச் செடிகளுக்குள்ள மதிப்புக் கூட அவன் அப்பனுக்கு இல்லையா?

அவன் அப்பன் இருந்த நிலையென்ன, அவருக்கு தோட்டத்தில் இருந்த மரியாதை என்ன? நேற்று வந்த பறங்கித்துரை என்னவெல்லாம் கேவலமாகப் பேசிவிட்டான்? இந்த துரை பிறப்பதற்கு முன்பிருந்தே இந்தத் தோட்டத்தில் வேலை செய்

தான் அவன். அவன் கைபட்டு வளர்ந்தவைதானே இந்தத் தேயிலைச் செடிகள் எல்லாம்? ஆனால் அவன் உழைத்து, உழைத்து ஓய்ந்த பிறகு அவனது உடலை அடக்கம் செய்யும் போது இரண்டு தேயிலைச் செடிகள் பிடுங்கப்பட்டால் அது குற்றம். அவன் தகப்பனுக்கு துரை அளிக்கும் மரியாதை இதுதானு?

மாரி சோயிலருகே வந்து விட்டான். வீட்டுக்குப் போக மனமில்லை. கோயில் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து தூணில் சாய்ந்து கொண்டான் ஒரு முழு மலையையே தனியே கவ்வாத்து வெட்டி விட்டு வந்தது போன்ற ஒரு சோர்வு. கோயிலில் 1914 என்று பொறித்திருந்தது தெரிந்தது. இந்தக் கோயிலை எப்படி மண்சுமந்து கட்டினுன் என்பதை அவன் தகப்பன் கதை கதையாக்க கூறியிருக்கிறுன். அவனுக்கா இந்த அவமானம்?

''வேச மவன். இவன் பொறக்கிறதுக்கு முந்தியே அப்பனும் மத்த தொழிலாளர்களும் காடாயிருந்த இந்த எடத்தை வெட்டி தேயிலை நாட்டி தோட்டமாக்கிஞங்க. அவங்களுக்கோ இந்தத் தோட்டத்திலே உரிமையில்லே. என்னத்துக்கு உரிமையில்லே? செத்த பொறவு பொதைக்கிறதுக்கு? நன்றி கெட்ட பயங்க!'' மாரியின் மனம் குமுறியது.

நன்ருக இருட்டி விட்டது. கோயிலின் மேலுள்ள லயங்களிலிருந்து மினுக் மினுக்கென்று விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

இனி என்ன செய்வது எங்கே போவது என்றே மாரிக்குத் தெரியவில்லை. தன் முன்னே கருங்குன்றுகளாகக் காட்சியளித்த மலைகளையே நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நேர்ந்த இந்த அவமானத்தோடு எப்படி தோட்டத்தில் தலைகாட்டுவது? அது அவனுக்குண்டான அவமானமாக இருந்தால் பரவாயில்லை; அவன் அப்பனுக்கு ஏற்பட்ட அவமானம் இது.

நேரே சங்கத் தலைவரிடம் போகலாம் என்று எண்ணினுன். யாரிடமாவது தன் ஆற்ருமையை சொல்லி அழ வேண்டும் போலிருந்தது. ஆனுலும் பழம் பெரும் சங்கமான தனது சங்

---

இராமர்: நான் என்னுடைய மகனுக்கு சின்ன வயதில் இருந்தே இயங்கியல் பொருள் முதல் வாதத் தத்துவத்தை சொல்லிக் கொடுத்து வருகிறேன்

சோமர்: ஏன் அவ்வளவு அக்கறையாய்ப் படிப்பிக்கின்றீர்?

இராமர்: அவன்ரை சாதகக் குறிப்புப்படி அவன் வருங்காலத்திலை பெரிய அரசியல் தலைவராய் வருவனும் அதுதான்.

கத் தலைவரைப்பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயமில்லை. பாஸ் போர்ட் விஷயங்களில் அவர் தொழிலாளரிடமிருந்து எப்படி பணம் கரந்தார் என்பதும் அவருடைய இன்னும் பல ஊழல்களையும் அவன் அறிவான். 'நீ ஏன் இப்படி செஞ்ச' என்று தோட்டத்துரை கூறியதையே திருப்பிக் கூறுவான். எப்படியும் பிரச்சினைகள் இல்லாமல் காலத்தை கொண்டுபோவதே அவரதும் அவரது சங்கத்தினதும் கொள்கை. கோட்டாக்காசை நம்பி அவரும 'செக்ரேல்' காசை நம்பி அவர் சங்க உத்தியோகத்தர்களும் வாழ்கிருர்கள். அவ்வளவுதான்.

பெருமாள்சாமியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மாரிக்கு அவனை அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும் அவன் கூறி வந்ததில் இதுவரை தனக்குத் தென்படாத நியாயம் ஒன்றிருப்பதை மாரி உணர்ந்தான்.

★

''யாரது'' என்று கேட்டுக் கொண்டே பெருமாள்சாமி கதவைத் திறந்தான். வழக்கம் போல நாலைந்து இளைஞர்கள் அவன் காம்பராவில் இருந்தார்கள். மாரியின் முகத்தைக் கண்ட பெருமாள்சாமி திகைத்துப் போனுன். 'அண்ணே என்ன நடந்தது?' என்று கேட்டான்.

''தம்பி என்னுன்னு சொல்றது? எங்கப்பனை பொதைக்கிறதுக்கு ரெண்டு தேயிலைச் செடியைப் புடிங்கிட்டேன்னு தொரை தெண்டம் போட்டிருக்கான் என்று கூறி, நினைவு தெரிந்த நாளிலிருந்து அழுதறியாத மாரி விம்மி விம்மி அழுதான்.

''தம்பி, நீயே சொல்லு. அவர் சாகற நேரத்துலே எலும்பும் தோலுமாத்தான் இருந்தார். வாழ்நாளெல்லாம் ஒழைச்சு ஒழைச்சு ஓடாப் போயிருந்தார். யாருக்கு ஒழைச்சார்? இந்தத் தோட்டத்துக்காகத்தானே? ஆனுல் சாவுல கூட அவருக்கு நிம்மதி இல்லை. இரண்டு தேயிலைச் செடியை அவரோட உயிரைவிட பெரிசா மதிக்கிறுன் தொரை. உயிரோட இருக்கிறவங்களே எவ்வளவோ அவமதிக்கிறுங்க. பொறுத்துக் கொள்ளுறும். ஆனு செத்துப் போனவனையே அவமதிக்கின்றுனே, அதெ என்னுல பொறுக்க முடியல்லே. எங்க அப்பன் என்ன சாமான்யமானவரா? அவர் காலத்துல அவரெப் பாராட்டாத தொரை இல்லே. பெரிய கணக்கப் புள்ள கூட பூவான் 'என்ன லா, வந்து உட்காரு' என்னு ஊட்டுக்குள்ளே கூப்புடுவாரு. அப்பேர்ப்பட்டவரை என்ன மாதிரித் தூக்கி வீசிப் பேசிட்டான் இந்த பறங்கிப் பயல், மாரி கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

''இவனைக் கடவுளைப்போல எண்ணிக்கிட்டிருந்தேன். என் புத்தியை செருப்பால அடிக்க வேணும். இன்னும் என்னென்னமோ கேக்கணும்னு நெனச்சுக்

குட்டிருந்தேன் இப்பத்தான் தொரை அவன்ட நெஜரூபத்தைக் காட்டுறன். நான்தான் முட்டாள்தனமா இருந்திருக்கேன். இவனுக்கு ஒரு பாடம் படிப்பிச்சுக் காட்டாட்டி எனக்கு மனசு ஆறுது தம்பி .. நாம யாரு இவனுக்குப் பாடம் படிப்பிக்க? நாங்க வெறுங் கூலிக்காரங்க தானே. தொரையிட சயவுல வாழற ஏழை ஜனங்கதானே''

''அப்படிச் சொல்லாதீங்க அண்ணே தொரையும் தோட்டச் சொந்தக்காரங்களுந்தான் நம்ம தயவுல வாழுறங்க. நாம மட்டும் இங்க வேலை செய்ய லேண்ணு சொந்தக்காரங்களுக்கு லாபமேது? தொரைக்கு சம்பளந்தான் எப்பிடிக் கெடைக்கும். அவங்கெல்லாம் தெருவிலேதான் நிக்க வேண்டிவரும். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. நாம கூலிக் காரங்க தான். தொழில ளிக தான். ஆனு நம்ம கை ஒஞ்சிட்டா அவங்க மட்டுமல்ல, இந்த நாடே ஒஞ்சிடும்.''

முதல் முறையாகப் பெருமாள்சாமி கூறுவதை மாரி கவனமாகக் கேட்டான். ஒரு பெரும் சொற்பொழிவைக் கேட்பதற்கு அவன் தயாராக இல்லை. ஆனுல் தனக்கு நேர்ந்த இந்த அவமரியாதைக்கு ஒரு விளக்கம் வேண்டி நின்றது அவன் மனம்.

''தம்பி, இதுவரைக்கும் நீ சொன்ன வெசயங்களை நான் சரியாக் கேட்டுக் கொண்ட இல்லே. தப்புத்தான். ஒன்னு கேக்கறேன். இத்தினை நாள் இந்தப் பாடுபட்ட எங்களுக்கு ஒரு ஒரு பொணத்தைப் பொதைக்கு றதுக்குச்கூட இந்தத் தோட்டத்திலே உரிமையில்லையா?''

''இன்னேக்கு உரிமை இல்லத்தான் நீங்க என்ன நெனச்சுக்கிட்டீங்க? தகப்பனும் நீங்களும் நாப்பது அம்பது வருசமா இந்தத் தோட்டத்துக்கு ஒழைச்சது உண்மைதான். ஆனு அதுக்காகத் தோட்டமே ஒனக்குச் சொந்தமாகாது. இந்தத் தோட்டத்திலே உள்ள ஒவ்வொரு தேயிலைச் செடியும் வெள்ளைக்காரங்களுக்குச் சொந்தம். நம்மகிட்டே வேலை வாங்கிறதுக்குத் தான் தொரைய வச்சிருக்காங்க. நமக்குச் சம்பளம் குடுக்கிறதே மறுநாள் உயிரோட வேலைக்கு வரவேணுங்கிறதுக்குத் தானே ஒழிய எங்க மேல உள்ள அன்பால இல்ல''

பெருமாள்சாமி கூறியதில் பெரும் உண்மை இருப்பதாக மாரிக்குப் பட்டது. 'தம்பி நீ சொல்ற வெசயங்களெ முன்னமே கேட்டுத் தெரிஞ்சு கொள்ளாதது பிழைதான் நீ ஏதோ 'வர்க்கம், வர்க்கம்,' என்னு பேசுவியே அது என்ன?'

'மாரி அண்ணே, தொழிலாளியாகிய நாம எல்லாம் ஒரு வர்க்கம். ஒழைச்சாத்தான் அவனுக வாழ முடியும். அவன் நல்லா இருக்கிறதுக்கு நாம தான் காரணம். நாம ஒட்டாண்டியா இருந்தாத்தான் அவனு

பங்களாவில இருக்க முடியும். நாம நல்லா இருந்தா அவன் நல்லா இருக்க முடியாது. லாபம் ஒண்ணுதான் அவனோட குறிக்கோள். அதெ சம்பாரிக்கிறதுக்குத்தான் நம்மை வேலைக்கு வெச்சிருக்கான். ஒங்க தகப்பனைப் பொதைக்கிற நேரத்திலே இரண்டு தேயிலைச் செடியைப் புடுங்கிட்டீங்க. இதனால அவனோட லாபம் இல்புட்டுக் குறையும். அதனாலதான் தெண்டம் போட்டிருக்கான். செடி எப்புடி செத்திச்சு, நாம எப்பிடிக் கஷ்டப் படறோங்கிறதைப் பத்தி அவனுக்குக் கவலையில்லை. நாம வேலைக்கு போயி அவனுக்கு லாபம் வந்தாப்போதும்'

துரையை சும்மா விடக் கூடாது. தொழிற் கோட்டிலே ஏற்றி நாலு கேள்வி கேட்க வேண்டும். என்று பெருமாள் சாமியின் நண்பர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

பெருமாள்சாமி கூறினன்; இதை நாங்க சங்கத்தில் சொல்லி நடவடிக்கை எடுக்கத்தான் வேணும். ஏதாவது பலன் கிட்டினாலும் கிட்டலாம். ஏன்னு அந்தச் சட்டங்களை உருவாக்கினதும் அவங்க வர்க்கந்தான். என்னைக்கு அந்த வர்க்கத்தை முழுசா தூக்கியெறியிறமோ அன்னைக்குத்தான் நமக்கு விமோசனம் கெடைக்கும்.... ''

மாரி பெருமாள்சாமியின் காம்பராவை விட்டு வரும்போது நடுநிசியாகிவிட்டது.

சின்னப்பிள்ளை ராத்திரி சாப்பாட்டுக்காக அவித்து வைத்திருந்த பலாக்கொட்டையைக் கூட சாப்பிடாமல் மாரி படங்குச் சாக்கில் முடங்கிக் கொண்டான். நேற்றிரவு அவன் போட்ட திட்டங்களும் அதனால் அவன் பெற்ற மனநிறைவும் இன்றிரவு அவனுக்கு இல்லை. இருபத்திநான்கு மணித்தியாலங்களுள் அந்த நிறைவு எவ்வளவு பொய்மையானது என்று அவனுக்குப் புலப்பட்டுவிட்டது. தான் கட்டிய மனக்கோட்டைகளைப்பற்றி எண்ணவே மாரிக்கு வெட்கமாயிருந்தது. இத்தனை நாட்களாக தானும் தன் தகப்பனும் தன்னைப் போன்ற வேறு பலரும் எவ்வாறு ஒரு பிரமையை உண்மையென நம்பி வைத்திருக்கிறார்கள்?

“ ....இப்பதான் உண்மை வெளங்குது. தொரை எங்களை மனுசனாகவே மதிக்கவில்லை. வெள்ளக்காரனுக்கு சம்பாரிச்சு குடுக்கிற அடிமைகள்தான் நாங்க. எங்களுக்கு மானமேது, மரியாதை ஏது? செத்த பொணத்தைக் கூட நல்ல மொறையிலே அடக்கம் பண்ண உரிமை இல்லே. நானும்தான் இவன்களைப் பத்தி பெருசா நெனச்சிகிட்டு இருந்தேன். ஆனு நெனப்பு வேறே உண்மை வேறே. கையக்காலைக் புடிச்சியாவது காலத்தை கொண்டு போவலாம்னு இருந்தேன். ஆனு பெருமாள் சொல்றது போல அவன் அவனோட வர்க்கப் புத்தியைக் காட்டிட்டான். பெரு

மாள் சொல்றதுதான் உண்மை. நம்ம வர்க்கம் ஒழைச்சித்தான் அவங்க வர்க்கம் வாழுது. பாபம் ஒண்ணுதான் அவங்களுக்கு கண். அதுவுக்காக எதுவும் செய்வாங்க. இவ்வளவு நாளா இதை வெளங்கிக்காம வேறு ஒரு லோகத்திலே இருந்திட்டேன்...... சின்னபுள்ள ... சின்னபுள்ளே, என்ன தூங்கிட்டியா.

''இல்லே முழிச்சுக்குட்டுத்தான் இருக்கிறேன்.'' அவளுக்கு மட்டும் எப்படித் தூக்கம் வரும்?

''நாளைக்கே பெருமாளோட சங்கத்துக்குப் போகனும் அவங்க சொல்றதுதான் சரியாயிருக்கு. அவங்களோட கொஞ்சம் பேசிட்டு வரணும் ''

பெருமாள்சாமி கூறியவை எல்லாம் மாரிக்கு புரியாவிட்டாலும் தோட்டத்து நடப்புகள் யாவும் ஒரு புதிய ஒளியில் தெரிவதாக அவனுக்குப் பட்டது. இதுவரை நடந்த சம்பவங்கள் பலவற்றுக்கு புதிய விளக்கங்கள், புதிய அர்த்தங்கள் இருப்பதை அவன் உணர்ந்தான். இவ்விளக்கங்களே சரியானவை என்பதை அவன் மனம் ஏற்றுக்கொண்டது. தன்னாலும் சுயமாக சிந்திக்க முடியும் என்பதை மாரி முதல் முறையாக உணர்ந்தான்.

திடீரென்று எதையோ எண்ணி மாரி கடகடவென்று சிரித்தான்.

ஒருவர்: அம்பாந்தோட்டையிலே புடவைக்கடையும், கேகாலையிலே பலாரக்கு மாளிகையும் வைச்சிருக்கிற உவர் தனிநாடு வேணுமெண்டு பேசிருரே...

மற்றவர்: அவர் அதெல்லாத்தையும் வித்துப்போட்டு இஞ்சை ஒரு சவுக்கார தொழிற்சாலை துவங்கியிருக்கிருர்.

---

''ஏன்ணு சும்மா பயித்தியம் புடுச்சமாதிரி சிரிக்கிறே?'' என்று கேட்டாள் சின்னபிள்ளை.

''இல்லே எனக்கு ஒரு வெசயம் நெனவுக்கு வந்தது. நம்ம சங்கக்காரங்க சொல்லி நாம டவுனிலே ஒரு கூட்டத்துக்குப் போனமே, ஒனக்கு நெனவிருக்கா? அதுலே பேசின நம்ம எம். பி. அதுதான் நம்ம தொகுதி மந்திரி என்ன சொன்ஞரு? இலங்கையிலே உணவு உற்பத்தியைப் பெருக்கிறதுக்காக, தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத்தில சின்ன காணித்துண்டுக குடுக்கப்போருேம்னு சொன்ஞரு இல்லையா? சொல்லி ஒரு வருசமாச்சு, ஒண்ணையுங்காணம். அது இல்ல செத்த பொணத்தைப் பொதைக்கிறதுக்கே எடங் கொடுக்கல்ல, மரக்கறித் தோட்டஞ் செய்யவா எடங் குடுக்கப் போருங்க? அதை நெனச்சுத்தான் சிரிச்சேன்''

அந்த அர்த்த ராத்திரியில் மாரியின் நகைப்பொலி 'இடி இடி' யென எதிரொலித்தது. ★

## கனலை மூட்டு

தேயிலைத் தோட்டத்துள்
தேய்ந்திடும் தோழனே!

உன்னுடலின் ரத்தத்தை
உறிஞ்சிக் குடிப்பதற்கு
எத்தனைப் பிராணிகள்
என்னென்ன ரூபத்தில்

உடலின் ரத்தத்தை
உறிஞ்சிட அட்டைகள்;
உழைப்பின் தேட்டத்தை
உறிஞ்சிட முதலைகள்!

அட்டைகள் உறிஞ்சிய
ரத்தத்தின் அளவு
எவ்வளவென்று
யாரும் நினைத்ததுண்டா?

வேலைகள் செய்யும்போதில்
மேனியிற் பட்ட
சாயத்தாற் சொரிந்த
ரத்தந்தான் எவ்வளவோ?

நீயிழந்த ரத்தத்தை
நினைப்பதற்கு யாருமிலர்;
எவ்வளவு ரத்தமென்று
எண்ணுதற்கு யாருமிலை!

அட்டையை வீழ்த்த
அப்புவாய் சவர்க்காரம்
புகையிலைச் சாற்றை
பொழிவாய் அதன்மீது
விழும் அட்டை
இறந்து மடிவதில்லை!

இதனை மனதில்
இன்றே நினைத்துவிடு!
அட்டையைக் கொல்ல
அனலை மூட்டிவிடு!

— நக்கீரன்

மூத்தகுடி

மனித நாகரீகம்
மறந்துபோன
சாதிகள்...
சாத்திரங்கள்
சம்பிரதாயங்களை
விட்டுவிடாமல்
கட்டி.. அழும்..
நாங்கள்தான்...
முதலில் தோன்றிய
மூத்த குடிகளாம்..?
ஓ. நாங்கள்
வால் நீண்ட..
வானரங்களின்
முசற்குட்டிகள்!

★

## பாராளுமன்ற ஜனநாயகம்?

வெந்து கருகிய
சொந்தமில்லா
செத்த பிணங்கள்
உயிர் நீங்கா
மனிதச் சடங்களின்
பாவ ஊத்தைகள்
ஒருங்கே சங்கமமாகி
ஓடிவரும்
பெரும் நதிக்கு
புனிதகங்கை
என்று பெயராம்?

— டானியல் அன்ரனி

---

## தவக்கோலம்

தத்துவங்கள் பல சொல்லி
தர்க்கங்கள் பல செய்த
தத்துவத்தின் வித்தகர்கள்
தவக்கோலம் பூண்டுவிட்டார்.

— இதயன்

# இந்தியா சிக்கிம்மை இணைத்துக் கொண்டது

— ஸ்ரீதரன்

சிக்கிம் இமயமலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இது நேபாளம், இந்தியா, சீனு ஆகிய நாடுகளின் மத்தியில் அமைந்துள்ளதினுல் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. இது இந்தியாவின் பாதுகாப்புக்குட்பட்ட காரணத்தால் இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருந்தது அதன் வெளிநாட்டு விவகாரங்கள். இவ்விராச்சியத்தின் சொந்த அரசன் இதை ஆண்டு வந்த போதிலும் இது இந்தியாவின் பாதுகாப்பிற்குட்பட்ட ஒரு பிரதேசமாக இருந்தமையால் இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் இதன் வெளிநாட்டு விவகாரங்கள் நடந்து வந்தன.

சீனுவிற்கு அண்மையில் அமைந்துள்ள இதன் பூகோள அமைப்புக் காரணமாக சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளால் தூண்டப்பட்ட இந்திய விஸ்தரிப்பு வாதிகள் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இவ்இமாலய இராச்சியத்தின் மீது தொடர்ந்து கண்வைத்து வந்துள்ளனர்.

1973 ஏப்பிரலில் சிக்கிமில் உள்ள இந்தியாவிற்கு சாதகமான சக்திகள் ஏற்படுத்திய குழப்பங்களை சாட்டாகக் கொண்டு இந்திய அரசாங்கம் அந்நாட்டிற்குள் தனது படைகளை அனுப்பியது. மேமாதம் 8-ந் திகதி இந்திய அரசாங்கம் கைச்சாத்திட்ட "சிக்கிம் உடன்படிக்கையை சாதகமாகக் கொண்டு அந்நாட்டின் மீது தனக்கிருந்த கட்டுப்பாட்டை மேலும் இறுக்கிக் கொண்டது.

இவ்வாண்டு இந்திய அரசாங்கம் சிக்கிம் சட்டசபை மூலமாக சிக்கிமை ஒரு பாதுகாப்பு நாடென்ற நிலையிலிருந்து விடுவித்து இந்தியாவின் ஓர் இணைந்த மாநிலமாக்கும் ஓர் அரசியல் திட்டத்தை நிறைவேற்றியது, இந்திய அரசியல் திட்ட ஆலோசகரான ஜி. ஆர். ராஜகோபால் என்பவரே இவ்வரசியல் திட்டத்தையும் உருவாக்கினுர்.

இவ் அரசியல் திட்டத்தின் படி அரசன் பேரளவில் மட்டும் அரசின் தலைவராக இருக்க இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டு ஜனாதிபதியாகவும் சட்ட சபையின் சபாநாயகராகவும் கடமையாற்றும் ஒரு பிரதம நிர்வாகியின் கையிலேயே உண்மையான அதிகாரமிருக்கும். இந்திய பாராளுமன்றத்தில் சிக்கிம் இராச்சியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்த இரண்டு ஸ்தானங்களே ஒதுக்கப்பட்டுள்ளது. 80 வீத உறுப்பினர் புரிந்து கொள்ள முடியாத ஆங்கில மொழியில் இவ்வரசியல் திட்டம் வாசிக்கப் பட்டு இதை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் கைகள் உயர்த்துவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் அரசனும் அரசியல் கட்சிகளும் இதற்கெதிராக குரல் எழுப்பியபோதிலும் அவற்றையெல்லாம் அலட்சியம் செய்து விட்டு இந்திய அரசாங்கம் இந் நாட்டை இணைக்கும் திட்டங்களை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது.

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஆக்கிரமிப்பு நோக்கங்களின் பிரதிபலிப்பே இவ்விணைப்பு எனக் கருதவேண்டும். 1962-ம் ஆண்டு சீனாவிற் கெதிரான இந்திய ஆக்கிரமிப்பு, சீன எல்லையில் பலத்த மோதல்களுக்கு வழி வகுத்த சோவியத்தின் ஆத்திரமூட்டும் செயல்கள், சீனாவின் வடக்கு எல்லையில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பத்துலட்சத்திற்கு மேற்பட்ட துருப்புகள் குவிக்கப் பட்டமை, இறைமை படைத்த பாகிஸ்தான் அரசு சிர்குலைக்கப் பட்டு இந்தியாவின் விடுதேங்காயாக வங்காள தேச அரசாங்கம் உருவாக்கப்பட்டமை, ஆப்கானிஸ்தானில் சதி நடவடிக்கைகளுக்கு வழி கோலியமை, இந்து சமுத்திரத்தில் சோவியத் யுத்தக் கப்பல்களின் தொகை அதிகரித்து வருதல், இறுதியாக சிக்கிம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டமை ஆகிய சகல நிகழ்ச்சிகளும் சீனாவைச் சூழ பகை அரசுகளையும் இராணுவத் தளங்களையும் அமைத்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பங்களோட்டுத்தனமான முயற்சிக்கும் சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளும் இந்திய விஸ்தரிப்பு வாதிகளும் புத்துயிர் கொடுப்பதாக அமைகிறது.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இக் கொள்கை தோல்வியுற்றதுபோல உலகின் சகல சமாதானம் விரும்பும் மக்களின் நல உரிமைகளுக்கும் முரணான இக்கீழ்த்தரமான கொள்கையும் தோல்வியடைவது நிச்சயம்.

சீனா தனது எல்லைகளை விஸ்தரிக்க முயலுகிறது. நாடுகளைப் பிடிக்க பெரு முயற்சி செய்கிறது. தளங்கள் அமைக்க எத்தனிக்கின்றது என்று பச்சை அபாண்டத்தை நாளாந்தம் கக்கி வரும் பத்திரிகைகளும் அதன் எசமா

னர்களும் 'சாத்வீக' பாரதத்தின் ஆளும் வர்க்கம் சிக்கிமை கபளீகரஞ் செய்துள்ளது பற்றி என்ன கூறப் போகிறார்கள். பாகிஸ்தான் துண்டாடப்பட்டபோது கூறப்பட்ட போலி நியாயங்கள் இறுதியில் உலக மக்கள் மத்தியில் அம்பலமாகி இந்திய ஆளும் வர்க்கத்தினதும் அதன் புதிய எஜமானனை சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தினதும் சுயரூபம் சிக்கிம் விஷயத்தில் தெரியப் போவது நிச்சயம், இது போன்ற நடவடிக்கைகள் தான் 'இந்திய விஸ்தரிப்பு வாதம்' என இன்று உலக மக்களால் அழைக்கப்படுவதாகும்.

★

# பத்திரிகைத் தட்டுப்பாடு

பள்ளிச் சிறுவன் நான்......
பள்ளிப் படிப்பெழுத......
பத்திரிகை கிடைக்கவில்லை
பாடங் கற்பதற்கோ......
பள்ளிக்கு நான் செல்லவில்லை.
பத்திரிகைக்கோ பெரும் தட்டுப்பாடாம்.
ஆனால்......
சினிமா விளம்பரத்திற்கும்......
பழஞ்சமய நம்பிக்கைக்கும்......
எங்கள்......
எம். பி. யும். மந்திரியும்
கூடி நிற்கும் கூட்டத்திற்கும்,
அலங்கார சின்னங்களாய்
அறிவித்தல் ஏடுகளாய்
சாதனையின் பட்டியலாய்
சந்து பொந்தெல்லாம்
எத்தனையோ போஸ்டர்கள்
அம்மம்மா.........!!! அளவில்லை.
அத்தனைக்கும் பத்திரிகை
எங்கிருந்து வந்ததுவோ......?

—ச. தேவசிகாமணி

'கனல்'
ஹைலண்ட்ஸ்
கவிதா மண்டல வெளியீடு,
அட்டன்.

<u>நாவல் விமர்சனம்</u>

# காலங்கள் சாவதில்லை

— யுவன் —

மலையக மக்களைப் பற்றி ஒரு நாவல் வெளிவந்ததைக் கேள்விப்பட்டவுடன் அதனை வாசிக்க வேண்டுமென்ற ஆர்வமும், அதனை விமர்சிக்க வேண்டுமென்ற விழைவும் எனக்கு ஏற்பட்டது. ஆனால் நாவலை வாசித்த பின்னர் அந்த ஆர்வமும், விழைவும் மறைந்து விட்டன. இது விமர்சிக்கப்படக்கூட அருகதையற்றது என்ற கருத்தை நியாயப் படுத்தக் கூடியதாக நாவல் அமைந்திருக்கிறது. விமர்சிப்பதால் வெளியீட்டாளர்களின் விளம்பர வார்த்தைகள் வெறும் வியாபார நோக்கையுடையவை என்பதை உணர்த்தவும் இனி எழுதுவோராவது பார்வையை நேர்ப்படுத்திக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தினுலுமே இதனை எழுதுகிறேன்.

இந் நாவல் மலையகத்தொழிலாளரின் எந்த ஓர் அடிப்படைப் பிரச்சினையையும் பிரதிபலிக்கவில்லை''. உழைப்பையே நம்பி வாழும் ஒரு மக்கள் கூட்டத்தின் ........... பற்றியும் இந்நாவல் கூறுகின்றது'' என்று நாவலாசிரியர் கூறுவதில் 'மக்கள் கூட்டம்' என்ற சொற்ருெடரால் முழு தொழிலாளர் வர்க்கத்தின் போக்கு பற்றியே அவர் கூறுகிருர் என்றே கருதுகிறேன். அப்படியாயின் அவர்களின் இன்றைய (நாவல் படைக்கப்பட்ட காலத்தின்) அபிலாஷைகள் போன்றவைகளைச் சித்தரிப்பதாக அமைய வேண்டும். ஆனால் நாவலில் அவர்களை இன்றைய மனிதராகக் காண்பதற்கு எந்தத் தடயமும் இல்லை. பொது நிலைக்கு வகையான கதையாக எழுதாமல், ஆயிரத்தில்ஒன்றைப் பொது நிலைக்கு வகை மாதிரியாகக் கதையாக்கியிருக்கின்றுர். மக்கள் கூட்டமென்று அவர் கூறுவது பிரக்ஞை பூர்வமற்ற வார்த்தைகள் ஒப்பிட்டு நோக்கில் கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை இவ்வம்சத்தில் இதனை விடத் தரமானது என்பதனையும் கூற விரும்புகிறேன்.

இந் நாவலின் மையக் கருத்து தொழிலாளர் செக்ரோலில் உள்ள கணக்குப்படி சம்பளம் பெறுவதற்கு நடாத்தும் போராட்டமாகும். 1974-ல் தோட்டப் பகுதிகளிற் சம்பளப் போராட்ட

மென்றால் அது மாதச் சம்பளக் கோரிக்கையே குறிக்கும். ஆனால் ஆசிரியர் காலாவதியாகிவிட்ட ஒரு பிரச்சனையைத்தான் பெரிது படுத்தியிருக்கிறார். உடன் நிகழ் கால போக்குகளில் 'சிலிர்ப்படையாமல், 'அசைபோடும்' எழுத்தாளராக அவர் இருப்பதனை இதன் மூலம் புலப்படுத்துகிறார். செக்ரோலில் உள்ள தொகைக்கு குறைவாக கொடுக்கும் தந்திரம் ஒரு தலைமுறைக்கு முன் நடந்ததாக முதியோர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். இன்றும் சில இடங்களில் இது நடப்பதாக அவர் சமாதானம் கூறுவாரானால் அதுவே அவர் அபூர்வ நிலையைப் பொது நிலையாகக் காட்ட முனைந்துள்ளதை நிரூபிக்கும். மக்கள் பயனடைவதற்காகவே இலக்கியம் என்ற கருத்து ஆசிரியருக்கு உடன்பாடற்றதோ என்ற சந்தேகம்எழுவது தவிர்க்க முடியாததாகிறது. பெரும்பாலும் காலாவதியாகிவிட்ட பிரச்சினையை இன்றைய நாவலின் கருத்தாக அவர் கையாண்டிருப்பதே இதற்குக் காரணம்.

இன்றைய மலையகத் தொழிலாளர் ஓரளவிற்காவது வர்க்க பேதம் பெற்றிருக்கிறார்கள் என்பதனை மறுக்க முடியாத இன்றைய கட்டத்தில் அவர்கள் இன்றில்லாத பிரச்சினை ஒன்றுக்காகப் போராடுவதாகக் காட்டியிருப்பது அவர்களைக் குறைத்து மதிப்பிடும் செயலென்றே கூற வேண்டும். உண்மைகளைப் புரிந்து கொண்டு தொழிலாள இளைஞர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் கொடுக்க அஞ்சி வால் பிடிக்கும் போலி தொழிற்சங்கத் தலைவர்மாரே அவர்களை அணுக அஞ்சும் காலமிது. இத்தகைய நிலைமையில் அவர்களின் வளர்ச்சியைக் கொச்சைப் படுத்துவதுபோல சுதை அமைந்திருப்பது அவர்களை அவமானப் படுத்தக் கூடியது என்று கூறுவது நியாயமாகவே படுகிறது. தொழிலாளரின் அவல வாழ்விற்கு அடிப்படைக் காரணம் சுரண்டல்தான் என்பதனை உணர்ந்துள்ள மலையக இளைஞரை இவ்வாறு காட்டுவதனை அவமானப் படுத்துவது என்ற சொற்றொடரால்தான் சரியாக விளக்க முடியும்.

ஆசிரியர் சிறு பிள்ளைத்தனமாக ஒரு தோட்ட தலைமைக் குமாஸ்தாவே தொழிலாளரின் பிரதான எதிரி என்று சித்தரிக்கிறார். தோட்ட உத்தியோகத்தரின் நிலை பரிதாபத்திற்குரியதென்று அவரே ஓரிடத்தில் (பக். 194) கூறியிருக்கிறார். அவர்கள் முடுக்கி விடப்படும்போது இயங்கும் கருவிகளை ஒத்தவர்கள் என்பதையும் காட்டியிருக்கும் ஆசிரியர் அவர்களில் ஒருவரையே தொழிலாளரின் பிரதான எதிரியாகக் காட்டியிருப்பதற்குச் சொந்தக் காரணம் இருக்குமோ என்று ஐயப்படவேண்டியதாக இருக்கிறது. அனாவசியமாக கிளார்க்கரின் மனைவியை இழுத்து கிளுகிளுப்பேற்படுத்தி ஆசிரியர் ரசிக்கும் போக்கு இந்த ஐயத்தை வலுப்படுத்துவதாயமைகிறது. கிளார்க்கரை வில்லனாகக் காட்டுவதில் ஏற்பட்ட சிரத்தையால்

கண்டக்டர், பெரிய துரை போன்றவர்களை மிக நல்லவர்களாகக் காட்டியிருக்கிறார். பெரும்பாலும் தோட்டங்களில் இவர் குறிப்பிடுவதைப்போன்று தொழிலாளர்களுக்கும் கிளார்க்கருக்கும் நேரடித் தொடர்புகள் கிடையாது. ஆனால் கண்டக்டர்மாருக்கும் தொழிலாளர்களுக்கும் இத்தகைய தொடர்பு தவிர்க்க முடியாதது. கிளார்க்கர் நிர்வாகம் சம்பந்தப்பட்டவர், கண்டக்டர் நிறைவேற்று அதிகாரி. இதனால் இவருக்குத்தான் தொழிலாளரோடு முரண்படும் நிலை ஏற்படும் தொழிலாளரின் ஆத்திரத்திற்கானான கண்டக்டர்களின் தொகை இதனை நிருபிக்கும்.

இவ்வாறு யதார்த்த நிலைக்கு மாறாகக் கிளார்க்கரை காட்டியிருக்கும் ஆசிரியர் ஏன் இவ்வாறு செய்திருக்கிறார் என்பதனைக் கருத்தூன்றிக் கவனிக்கையில் அவரின் உண்மைச் சொரூபம் தெரியவருகின்றது. ஆசிரியர் மிக அசிங்கமான வகுப்புவாத உணர்வு கொண்டிருப்பதற்கு நாவலில் போதிய ஆதாரங்கள் உண்டு. இ[illegible]னை குமைச்சலே உண்[illegible] மாறாக கிளார்க்கரை தொ[illegible]ளரின் பிரதான எதிரி[illegible]ட வைத்திருக்கிறது. இ[illegible]த்தகைய பிற்போக்கு[illegible]தைத் துலாம்பரப்ப[illegible] பெரிய துரையை [illegible] காட்டும் இவரது [illegible]கிறது. இவரின் [illegible]ரகவராக இருப்ப[illegible]ம் அவர் சிங்களவ[illegible]ரகும். சிங்களவர்கள் கெட்டவர்கள் வெள்ளையர்கள் நல்லவர்கள் என்று காட்ட முனைந்திருக்கிறார். இவர் நாவலின் காலம் 1974-ம் ஆண்டு. லூல் கொண்டரா ஜேம்ஸ் டெய்லர் (James Tayler of Loolecondera Estate 1851-1892) காலமல்ல. வகுப்புவாத எரிச்சலால் சிங்களவரான கிளார்க்கரை வில்லனாகக் காட்டும் ஆசிரியர் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் ஓர் ஊழியனான வெள்ளைத் துரையை நல்லவனாகக் காட்டுவது அவரின் பிற்போக்குத்தனத்தைக் காட்டுவதோடு. நாட்டுப் பற்றின் மீதும் சந்தேகம் கொள்ளச் செய்கிறது. ஏகாதிபத்திய தாசர்கள்தான் இனவாதம் பேசி, சூழ்ச்சியில் வல்ல ஆங்கிலேயனை புகழும் போக்கினைக் கொண்டவர்கள். ஜேம்ஸ் டெய்லர் காலத்துத் தொழிலாளரல்லர் இன்றிருப்போர். ஜேம்ஸ் டெய்லரை அன்றைய லூல் கொண்டரா தோட்டத்து மக்கள் சாமி துரை என்று கூப்பிட்டதாக ஆங்கிலேயர் குறித்துள்ளனர். இவரோ இன்றுள்ள ஆங்கிலத் துரையொருவனை தொழிலாளர் 'தகப்பன்' என்பதாகக் கூறியுள்ளார். இங்கும் இன்றைய தொழிலாளர் அவமதிக்கப்பட்டிருப்பதாகவே எனக்குப் படுகிறது. இன்றைய ஆசிய, ஆபிரிக்க மக்கள் ஆங்கிலேயரைப் பற்றி நன்கு புரிந்துகொண்டிருக்கும் கட்டத்தில் தோட்டத் தொழிலாளர் இன்னும் புத்தியற்றோராய் இருக்கிறார்கள் என்று மட்டந்தட்டத்தான் இவ்வாறு செய்தாரோ?

கிளார்க் நகரத்திலுள்ள காடையரைக் கொண்டு (அவர் களும் சிங்களவர்கள்) ஆறுமுகம் போன்றோரைத் தாக்கத் திட்டமிடுவது, கண்ணம்மாவைக் கடத்த வைப்பது போன்ற சம்பவங்களைச் சிருஷ்டித்திருப்பது அவரது வகுப்புவாத மன எரிச்சலுக்கு இதங்கொடுத்தாலும் நமக்கு ஆத்திரத்தை ஊட்டுகிறது.

எழுத்தாளனின் கடமை வகுப்புவாதவுணர்வு யாரால், ஏன் எழுப்பப்படுகின்றது என்பதனை விளக்குவதாக அமைய வேண்டும், அதனைச் செய்ய முடியாவிட்டால் இப்பிரச்சனை விளங்கவில்லையென்று சும்மா இருப்பதுதான் நல்லது. இந்நாட்டில் வகுப்புவாத விதையை விதைத்தோர் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள், அதனை வளர்த்தோர் ஏகாதிபத்தியத் தாசர்களான உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் என்பதனை ஏகாதிபத்திய ஆங்கிலேயனைப் போற்றும் யோஸப்பால் உணர்ந்துகொள்ள முடியாதுதான். சில மாதங்களின் முன் அட்டன் பாடசாலை மாணவர்கள் நடித்த நாடகமொன்றில் (வெல்வதற்கோர் உலகமுண்டு) சிறுவர்கள் கூட இப்பிரச்சினையின் உண்மையினை உணர்ந்துள்ளதனைக் காட்டினார்கள். பொறுப்பான எழுத்தாளன் எவனும் சமுதாயத்தைக் கெடுக்கும் கருத்தைக் காசாக்க கதை எழுத மாட்டான். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டியது எழுத்தாளனின் கடமை.

நாவலின் மையக் கருத்தோடு ஒட்டாத சிருங்காரக் காட்சிகளை படைப்பதில் ஆசிரியர் பெரு வேட்கை கொண்டவராக இருக்கிறார். கண்ணம்மா, அலமேலு, கிளார்க்கரின் மனைவி, கராஜில் இருந்த பெண், துரையின் மகள் ஆகியோர் பாதாதிகேசம் வர்ணனைக் குட்படுத்தப்பட்டுள்ளார்கள். தொழிலாளரின் முக்கியப் பிரச்சனைகளை நுணுகிப் பார்க்க முடியாத ஆசிரியரால் பெண்களின் அங்கங்களை கிமோனு பொத்தான் கண் துளையூடாகப்பார்த்து ரசிக்க முடிந்திருக்கிறது. இவர் இவ்வாறு எக்ஸ்ரே கண்களோடு இவைகளைப் பார்த்து சித்தரிக்காவிட்டால் நாவலின் விறுவிறுப்பு குறைந்து விடுமென்று நினைத்தாரோ? 'பாட்டி சொன்ன கதை'யிலிருந்து (இவர் பரிசு பெற்ற முதலாவது சிறுகதை) இந் நாவல் வரை பெண்களின் ஆடைகளைக் களைந்து காட்டுவதில் ஆசிரியர் நன்கு முதிர்ச்சியடைந்திருக்கிறார். இவர் கதாநாயகியாகக் காட்ட முனைந்துள்ள கண்ணம்மா கூட இவரது சேட்டைகளிலிருந்து தப்பவில்லை குனிய வைத்து, நிமிர வைத்து, குளிக்க வைத்து, சும்மா கிடக்க வைத்து சினி கெமரா டெக்னிக்குகளைக் கையாண்டு பரவசமடைகிறார்.

சிருங்கார ரஸத்தில் சினி கெமரா டெக்னிக்குகளைக் கையாண்ட ஆசிரியர் ஸ்டண்ட்

காட்சிகளையும் காட்டாமல் விட வில்லை. எல்லா அம்சங்களும் பொருந்தியிருக்க வேண்டாமா? அதனால் இதுவும் உண்டு. தொழிலாளரின் போராட்டங்களை நேரிற் கண்டவர்கள் இவை சினிமா ஸ்டண்டுகள் என்பதனை உணர்வர். இவரின் சண்டைக் காட்சிகளை வாசிக்கும்போது கும் கும் என்று வாத்தியார் சண்டை போடும்போது கேட்கும் பின்னணி ஒலி கேட்பது போல் பிரமை தட்டுவது இதனை உணர்த்தும்.

இவரின் பாத்திரங்கள் ஒன்று கூட சரியாக வளர்ந்தெடுக்கப் படவில்லை. முக்கியபாத்திரமான ஆறுமுகத்தின் பாத்திரம் கூட ஒழுங்காக, கிரமமாக வளர்த்தெடுக்கப்படாததால் முழுமைபெறா மற் போய் விடுகின்றது. வில்லனாக்கப்பட்டுள்ள கிளார்க்கும்' கதாநாயகனாக ஆறுமுகமும் சினிமாப் படப் பாத்திர வார்ப்புகளாகவே அமைந்துள்ளனர். உதிரிப் பாத்திரங்களைக் கையாண்டிருப்பதே பாத்திரங்களின் போலித் தன்மைக்குக் காரணம். பொது நிலைமைக் கேற்ற வகை மாதிரி பாத்திரப் படைப்பு ஆசிரியரின் கற்பனைக்கு எட்டாத தென்றே எனக்குப் படுகின்றது.

மொத்தத்தில் வகுப்புவாத நெடியடிக்கும், தொழிலாளரின் நடைமுறைப் பிரச்சினைகளுக்குப் போக்குக் காட்டும் நாவலென்றே இதனைக் கூறவேண்டும். இதனை வாசிப்பதால் மலையகத் தொழிலாளருக்கோ, பிறருக்கோ எதுவித பிரயோசனமும் இல்லை.

# சுரண்டல் நீதி

பரம்பரையாய் உழைத்துழைத்தும்
பலர் பசியை தொலைத்த அவர்
உடல் பசியால் வெந்தழிந்து
தெருவெல்லாம்......
பிணமாக நாற்றமெடுக்கின்றது.
கண்டோர் காறி உமிழ்கின்றார்.
ஆனால் அவருழைப்பால் சுகங்கண்டார்
அந்தோ பவனி வருகின்றார் ..
உழைத்தோர் உடலுக்கா.....?
இந்த அவலமென......
உலகம் வியக்கிறது......
நானோ வியப்படையேன்...?
ஏனென்றால் இதுதான்...
சுரண்டல் நீதி..!

—க. இராஜகலோசனா

'கனல்'
ஹைலண்ட்ஸ்
கவிதா மண்டல வெளியீடு,
அட்டன்.

# வாருங்கள் இந்த வையகத்தை வென்றெடுப்போம்!

— அன்புஉன்

அம்புலியை சூரியனை அவனியிலே செய்வதற்கு
நம்பிக்கை கொண்டுள்ள நமது வாலிபரே,
வானத்தில் எழும்பும் சிவப்புச் சூரியன் போல்
சிவந்து சிவந்து எழுந்த மாணவரே,
வாருங்கள் இந்த வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் இந்த வையகத்தை வென்றெடுப்போம்!!

இந்த உலகம் சொந்த எங்களது
முந்தை முதியோரின் சொந்த உலகமன்றோ
எங்களது தந்தையின் தந்தையின் உழைப்பாலே
இந்த உலகம் உருவாக்கப் பட்டதன்றோ
எங்களுக்கு சொந்தம் எனப்படும் இவ்வுலகை
வென்றெடுக்க வேண்டிய வீரர்கள் நாங்களன்றோ
ஏகாதிபத்தியத்திற்கு ஏர்பூட்டி உழுபவரை
முதலாளித்துவத்திற்கு முதுகு சொறிபவரை
தும்பாக தூசாக தூக்கி எறிந்துவிட்டு
வாருங்கள் இந்த வையகத்தை வென்றெடுப்போம்!

கஞ்சிக்கும் வழியின்றி கதறும் எங்களது
பிஞ்சுகளின் வயிற்றுப் பிற்றல்கள் தெரியலையோ?
அஞ்சடுக்கு மாளிகையில் அன்னவர்கள் ஒன்றுகி
கொஞ்சி விளையாடும் கூக்குரல்கள் கேட்கலையா?
ஆலைகளில் வயல்நிலத்தில் ஏழைத் தொழிலாளரெல்லாம்
கூனிக் குறுகி உழைத்துக் களைத்ததினால்
வாழ்வென்ன கண்டார்? வளமென்ன பெற்றார்?
பேமெண்டில் உழைப்போர், பெஞ்சினிலே சுரண்டுவோர்
நாயிலும் கீழாக நம்மவர்கள் வாழ்வதனை
ஏனென்று கேட்க எமைத்தவிர யாருள்ளார்?

பச்சைகளும் நீலங்களும் பாராளும் சிவப்புகளும்
இச்சையுடன் எமக்காய் இனிது உழைப்பரென்று
என தருமை வாலிபரே எண்ணிநீர் இருக்கின்றீர்?
கல்வீடு, உழவுமெசின், சுசங்காப் புதுநோட்டு
வெள்ளையிலும் புதுவேட்டி வெளிக்கிட்டால் யோக்கியனாய்
வாழுகின்ற சுரண்டலரா வாழ்வுதரப் போகின்றார்?
எங்களது பிரச்சனைகள் எங்களுக்கே தெரியுமடா
எங்களது தேவைகள் எங்களுக்கே புரியுமடா
எங்களது தேவைகளை நிறைவுசெய்யும் தலைவர்கள்
எங்களுக் குள்ளேயே இருந்தெழ வேண்டுமடா!

பூஷ்வா ஜனநாயக கோட்டையினை உடைத்தெறிந்து
புதிய ஜனநாயக புரட்சியினை நாம்செய்வோம்
உழைப்பவனுக்கே உழைப்பு சொந்தமென்றும்
உழுபவனுக்கே உழுநிலம் சொந்தமென்றும்
குடியிருப்பவனுக்கே வீடுகள் உரிமையென்றும்
தொழிலாளத் தோழருக்கே தொழிற்சாலை உரித்துவென்றும்
சொத்துக்கள் அனைத்தும் மக்களின் சொந்தமென்றும்
புதியதோர் ஜனநாயக பூவுலகை நாம்செய்வோம்
கதியேதும் இல்லாமல் கஷ்டமுறும் மக்களுக்கு
சுதியான ஓர்வாழ்வை சுணங்காது நாம்செய்வோம்

சிறைகள் ஒருநாளும் வலியவரப் போவதில்லை
கொடுமைகள் ஒருநாளும் தானே அழிவதில்லை
சிறைகளை கொண்டுவர வேண்டியவர் நாங்களன்றோ
கொடுமைகளை அழிக்க வேண்டியவர் நாங்களன்றோ
தனிச்சொத்து, தனிவாழ்க்கை, தனியுடமை என்பதெல்லாம்
இனி இல்லை என்னுமோர் இனியயுகம் அமைக்க……
ஆலைகளில் வயல்நிலத்தில் அன்றுடம் பாடுபடும்
ஏழைத் தொழிலாளர் வாழ்வின் துயர்களினை
மாற்றும் புரட்சிக்கு மக்களை தயார்செய்ய……
புத்துலகின் சிற்பிகளே புறப்பட்டு வந்திடுங்கள்

தனித்த ஒருவரினால் வரலாறு பிறப்பதில்லை
வரலாற்றை உருவாக்க வர்க்கப் போராட்டமும்
புதிய ஜனநாயகப் புரட்சியும் தேவையன்றோ
இந்த வரலாற்றை இப்பூமியிடை செய்யவல்ல
எமதருமை வாலிபரே, எமதருமை மாணவரே,
புதிய ஜனநாயக புரட்சிக்காய் கூர்மையாகி
இன்றே துணிந்து போராடத் தயார் படுங்கள்
துப்பாக்கி ஒன்றே தூசுகளைத் தட்டவழி
சுப்பனோடு, சுபையிர், சுனித்ரா, டானியலும்
தப்பாமல் கையில் தானெடுங்கள் துப்பாக்கி.

அப்பொழுதே நாட்டின் அநியாயங்கள் அறுத்து
சுத்தமுள்ள புதிய ஜனநாயகம் கண்டிடவாம்
இத்தரையில் இனிய வசந்தம் பிறப்பதற்கும்
இத்தரையில் இனிய சமதர்மம் வாழுதற்கும்
புத்தியுடன் இந்தப் பூமியினை சமமாக்கி
சினச் சிவப்பு விதைகள் நட்டிடுவோம்
போராட்டம் ஒன்றே இப்பூமியினை வெல்லவழி
என்பதனை எங்கள் இளைய தலைமுறையின்
புதிய ஜனநாயக புரட்சி மாணவரின்
புத்தம் புதிய பாடங்களாய் கற்பிப்போம்

தனித்த ஒருவரினால் வரலாறு பிறப்பதில்லை
வரலாற்றை உருவாக்க வர்க்கப் போராட்டமும்
புதிய ஜனநாயக புரட்சியும் தேவையன்றோ
புதிய வரலாற்றை பூமியிடை செய்யவல்ல
எமதருமை வாலிபரே எமதருமை மாணவரே
போராட வென்றே இப்பூமி இருக்கிறது
போராட்டம் ஒன்றே இப்பூமியினை வெல்லவழி
என்பதனை மனதில் எல்லோரும் கூர்மையாக்கி
வாருங்கள் இந்த வையகத்தை வென்றெடுப்போம்

## வெறும் பேஞ வீரர்கள்!

— தணிகையன்

ஓ தூக்குமரத்துக்
கொலையாளிகளே
ஏப்பிரல் எழுபத்தொன்றில்
உங்களது வயிற்றுக்காக
எத்தனை பேர்களது
கழுத்துக் கயிறுகளை
இழுத்து நெரித்தீர்கள்
முதலாளித்துவத்தின்
முதிர்ந்தரசு யந்திரத்தின்
கறள்படிந்த பீடமதில்
பலிக்கடாவாய் கொடுத்தீர்கள்
ஓ...! சிறுமுதலாளித்துவத்தின்
வெறும் பேஞவீரர்களே
இன்னுமா உங்களுக்கு
பாதை தெளிவாகவில்லை
உதிரிகளாய் திரியுமுங்கள்
தனிமனிதத் திட்டுக்களால்
வெட்டு குத்து என்ற
வெறும் !வாய்ச்சவாடல்களால்
விடுதலை கிட்டாது
விட்டுவிட்டு
மக்களிடம் போங்கள்
மக்களியக்கமதை
கட்டியெழுப்புங்கள்
கண்ணோட்டம் தெளிவுவரும்
காலத்தை மாற்றுகின்ற
கவிதைக்கு ஊற்றுவரும்!

## வர்க்கசமரசம்

— பாமரன்

காலையில்
தொழில்கோடு சென்று
சட்டப்படி ஊதியத்தை
தந்திடலே மறுத்திட்ட
தமிழ் முதலாளிக்காய்
வழக்கதனை பேசுகின்ற
அப்புக்காத்தொருவன்
மாலையில்
முற்றவெளி மைதானத்தில்
முழுதான உரிமைதனை
தமிழ் தொழிலாளர்கள்
பெற்றிடல் வேண்டுமெனில்
தனித்தமிழ்நாடு
பெற்றிடல் வேண்டுமென
அழகு தமிழில்
அழகாய்
பேசுகின்றான்

★

## அடுத்தவழி!

-கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

நேற்றுவரை நாங்கள்
நினைவயர்ந்து இருந்ததினால்
ஏய்த்துவிட்டார்; ஆனாலும்
இனிமேலும் பொறுத்திடவோ?
காத்திருந்து வாழ்க்கையிலே
கண்டசுகம் ஒன்றுமில்லை
ஆற்றல் மிகு கரத்தால்
ஆவதுதான் அடுத்தவழி!

இப்பத்திரிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம், கந்தர்மடம், 54/16, ஆத்திசூடி வீதியில் வசிக்கும் க. தணிகாசலம் அவர்களால், 93, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1974 கார்த்திகை மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.